திருவொற்றியூர் திருக்கோயில் ஸ்தல வரலாறு

அருள்மிகு வடிவுடையம்மன் உடனுறை
தியாகராஜ சுவாமி திருக்கோயில் பெருமைகள்

180 ஆண்டுகளாக நகரத்தார் பெருமக்களால் கொண்டாடப்பட்டுவரும்
மாசிமகம் - முருகன் வேல்வழிபாடும் மகேசுவர பூஜை வரலாறும் இணைந்தது.



திருவொற்றியூர் அருள்மிகு வடிவுடையம்மன் உடனுறை
அருள்மிகு தியாகராஜ சுவாமி

திருமந்திரத் திலகம்
முனைவர் மா.கி இரமணன்

முல்லை
பதிப்பகம்



தேரில் பவனி வரும் பழைய தெண்டாயுதபாணி சுவாமி
(தேவகோட்டையார் விடுதி)

திருவொற்றியூர் திருக்கோயில் ஸ்தல வரலாறு

- அருள்மிகு வடிவுடையம்மன் உடனுறை தியாகராஜ சுவாமி திருக்கோயில் பெருமைகள்.
- 180 ஆண்டுகளாக நகரத்தார் பெருமக்களால் கொண்டாடப்பட்டுவரும் மாசிமகம் முருகன் வேல்வழிபாடும் மகேசுவர பூஜை வரலாறும் இணைந்தது.

திருமந்திரத் திலகம்

முனைவர் மா.கி.இரமணன்

வெளியிட்டு வழங்குபவர்கள்

முல்லை மு.பழநியப்பன்

முல்லை மு.இராமநாதன்

முல்லை மு.கருப்பையா

323/10, கதிரவன் காலனி,
அண்ணாநகர் மேற்கு, சென்னை–40.
செல்: 9840358301.
e-mail: mullaipathipagam@yahoo.com

"முல்லை இல்லம்" 18A, மாயாண்டிச் செட்டியார் தெரு,
தேவகோட்டை – 630 302.

முதற் பதிப்பு : பிப்ரவரி 2019
பக்கங்கள் : 48
விலை : ₹30/-

தினமணி ஆசிரியர் **கே. வைத்தியநாதன்** அவர்களின்

பாராட்டுரை

இப்போதெல்லாம் தமிழ் நூல்கள் உலகத் தரமான வடிவமைப்பில் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. பாரதி கண்ட கனவுப்படி, பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்படுகின்றன. எந்தத் துறையாக இருந்தாலும் அதைப் பற்றிய தமிழ் நூல்கள் வரத் தொடங்கிவிட்டன.

பதிப்புத்துறை இன்றைய வளர்ச்சியைக் காணவும், ஆங்கிலப் புத்தகங்களுக்கு நிகராகத் தமிழிலும் நூல்களை அச்சிட்டு வெளிக்கொணர முடியும் என்கிற நிலைமை உருவாகவும் காரணமாக இருந்தவர்கள் மூன்று பேர். சக்தி காரியாலயம் வை. கோவிந்தன், 'தமிழ்ப் பண்ணை' சின்ன அண்ணாமலை மற்றும் முல்லைப் பதிப்பகம் 'முல்லை' முத்தையா ஆகிய மூவர்தான் அவர்கள்.

அவர்களது வழிகாட்டுதலால் தான் இன்று தமிழ் பதிப்புத்துறை சர்வதேச அளவுக்குத் தன்னை வளர்த்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பதிப்புத்துறை முன்னோடிகளின் பங்களிப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்கிற எனது மனக்குறை இப்போதுதான் தீர்ந்தது!

- தினமணி, கலாரசிகன், 29.06.2008

அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை - 2.

34-1

ஆனந்தமாய் வாழ்வோம்!

முடிவிலாத் துயரம் நீக்கி
மனதிலே கவலை போக்கி
விடியலாய் வாழ்வை ஆக்கி
வேதனை இன்றிக் காக்கும்
வடிவுடை நாயகி கருணை
விழிகளைத் திறக்க வேண்டி
அடிமலர் தொழுது நிற்போம்!
ஆனந்தமாய் வாழக் கற்போம்!

வான்மழையை யாராலும் வரவழைக்க முடியாது! அன்னை வடிவுடை நாயகி, தியாகராஜரின் அருள்மழையும் அப்படித்தான்! எத்தனைத் தவம் செய்து, விரதம் இருந்தாலும், தெய்வ அருள் என்பது, அது வரும் நேரம் வந்தால், எதுவும் தடை செய்து தடுக்க முடியாது.

அடியேன் வள்ளற்பெருமான் போல், நாள் தவறாமல் 27 ஆண்டுகளாக, இந்த ஆலயத்தை வலம் வந்து, நலம் பெற்றவன். வரலாற்றுச் சுருக்கத்தை நூலாக எழுதி 25 ஆண்டுகளாக 3000 பிரதிகள் வழங்கியுள்ளேன். இதன் விரிவான வரலாறு எழுதித் தந்தும் 20 ஆண்டுகளாகச் சிறைப்பட்டுக்கிடக்கிறது. முழுநூலும் அச்சில் மலர அன்னையின் அருள் நிச்சயம் ஒருநாள் கனியும்.

மூன்றாம் பதிப்பான இந்த வரலாற்றுச் சுருக்கத்தில் புதிய பல தகவல்களைத் தேடிக் கண்டுபிடித்துச் சேர்ந்துள்ளேன்.

முதற் பதிப்பு : பிப்ரவரி 2019
பக்கங்கள் : 48
விலை : ₹30/-

தினமணி ஆசிரியர் **கே. வைத்தியநாதன்** அவர்களின்

பாராட்டுரை

இப்போதெல்லாம் தமிழ் நூல்கள் உலகத் தரமான வடிவமைப்பில் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. பாரதி கண்ட கனவுப்படி, பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்படுகின்றன. எந்தத் துறையாக இருந்தாலும் அதைப் பற்றிய தமிழ் நூல்கள் வரத் தொடங்கிவிட்டன.

பதிப்புத்துறை இன்றைய வளர்ச்சியைக் காணவும், ஆங்கிலப் புத்தகங்களுக்கு நிகராகத் தமிழிலும் நூல்களை அச்சிட்டு வெளிக்கொணர முடியும் என்கிற நிலைமை உருவாகவும் காரணமாக இருந்தவர்கள் மூன்று பேர். சக்தி காரியாலயம் வை.கோவிந்தன், 'தமிழ்ப் பண்ணை' சின்ன அண்ணாமலை மற்றும் முல்லைப் பதிப்பகம் 'முல்லை' முத்தையா ஆகிய மூவர்தான் அவர்கள்.

அவர்களது வழிகாட்டுதலால் தான் இன்று தமிழ் பதிப்புத்துறை சர்வதேச அளவுக்குத் தன்னை வளர்த்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பதிப்புத்துறை முன்னோடிகளின் பங்களிப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்கிற எனது மனக்குறை இப்போதுதான் தீர்ந்தது!

- தினமணி, கலாரசிகன், 29.06.2008

அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை - 2.

ஆனந்தமாய் வாழ்வோம்!

முடிவிலாத் துயரம் நீக்கி
மனதிலே கவலை போக்கி
விடியலாய் வாழ்வை ஆக்கி
வேதனை இன்றிக் காக்கும்
வடிவுடை நாயகி கருணை
விழிகளைத் திறக்க வேண்டி
அடிமலர் தொழுது நிற்போம்!
ஆனந்தமாய் வாழக் கற்போம்!

வான்மழையை யாராலும் வரவழைக்க முடியாது! அன்னை வடிவுடை நாயகி, தியாகராஜரின் அருள்மழையும் அப்படித்தான்! எத்தனைத் தவம் செய்து, விரதம் இருந்தாலும், தெய்வ அருள் என்பது, அது வரும் நேரம் வந்தால், எதுவும் தடை செய்து தடுக்க முடியாது.

அடியேன் வள்ளற்பெருமான் போல், நாள் தவறாமல் 27 ஆண்டுகளாக, இந்த ஆலயத்தை வலம் வந்து, நலம் பெற்றவன். வரலாற்றுச் சுருக்கத்தை நூலாக எழுதி 25 ஆண்டுகளாக 3000 பிரதிகள் வழங்கியுள்ளேன். இதன் விரிவான வரலாறு எழுதித் தந்தும் 20 ஆண்டுகளாகச் சிறைப்பட்டுக்கிடக்கிறது. முழுநூலும் அச்சில் மலர அன்னையின் அருள் நிச்சயம் ஒருநாள் கனியும்.

மூன்றாம் பதிப்பான இந்த வரலாற்றுச் சுருக்கத்தில் புதிய பல தகவல்களைத் தேடிக் கண்டுபிடித்துச் சேர்ந்துள்ளேன்.

அப்பர் போல தன்னலம் இல்லா தெய்வத் தொண்டு செய்யும் சென்னை ஸ்க்ரஸ் திரு.வி.எம். ஜெயராமன் இந்த பதிப்பிற்கு உதவியுள்ளார். வாழ்க அவர் தொண்டு!

அன்புடன், தன்னலம் இன்றி வேண்டுவோருக்கு அன்னை வடிவுடையாள் நேற்றும், இன்றும், என்றும் அருள் செய்து கொண்டிருக்கிறாள். 60 அடியார்களுக்கு அருள் செய்ததுபோல் உங்களுக்கும் அருள் தருவாள். மனம் உருகி வேண்டுங்கள்...

1986 **மா.கி. இரமணன்**

பாரதி பாசறை
39/13, கிராமத் தெரு, சென்னை - 600019.
அலைபேசி: 944182153

ஃ

உ
சிவமயம்

திருவொற்றியூர் திருக்கோயில் ஸ்தல வரலாறு

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது அருந்தமிழ் மூதாட்டி ஔவையார் வாக்கு. 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் அவர் இனிதே கூறியிருக்கிறார்.

ஆன்மா லயிக்கின்ற இடமே ஆலயம்.

ஆலயத்தின் பெருமைகளை திருவருட்சித்தர் திருமூலர் கூறுகிறார்.

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னார்க்குத் தீங்குஉள; வாரிவளம் குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும்; காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத்தானே"

- திருமந்திரம் 518

"ஆற்றரும் நோய்மிக்கு அவனி மழைஇன்றி
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுஉதைத்தான். திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

- திருமந்திரம் 517

இந்தத் திருமந்திரப் பாடல்களால் தெரியவரும் கருத்துக்களாவன: கோயில்கள் பூசைகளின்றி, வழிபாடு நடக்காவிட்டால், மழை பொழியாது, வளமை குன்றும், திருடர்கள் அதிகமாவர், நோய்மிகும், மன்னருக்கு தீங்கு நேரும் என்கிறார்.

எனவே நாடும் வீடும் வளமை பெற, நமது கோயில்களை பாதுகாத்து, பூசித்து மகிழ்வோம்.

இந்தக் கோயில் செல்வங்களை இனி நுணுகிக் காண்போம். கோயில்களில் வாழும் கலைகள், நமது பாரம்பரியத்தின் உயர் நிலைகள், மண்ணைக் கல்லாக்கி, கல்லைக் கலையாக்கி, கலையைத் தெய்வமாக்கி, தெய்வத்தைச் சிலையாக்கி, ஓவியமாய், காவியமாய், ஏழிசையாய், எழில்மிகு நடனமாய் வழிபட்டான் தமிழன்.

அழகூட்டி மகிழ்விக்கும் ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் உறைவிடம் கோயில்கள்! தமிழகக் கோயில்களைப் பல்'கலை'க் கழகங்கள் எனலாம்.

"நாடு நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின், பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே"

- திருமந்திரம் 1445

திருமூலரின் இந்த சிந்தனையின்படி, ஆலயம் தேடிச் சென்று தரிசிக்க வேண்டும். திருவொற்றியூர் கோயிலை தரிசிப்போம் வாருங்கள்!

திருவொற்றியூர்

தெய்வ மணம் கமழும் தமிழகத்தின் திலகமாய் ஒளிவீசும் தலைநகர் சென்னைக்கு வடக்கே 8 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது இவ்வொப்பிலாத்தலம், சென்னை கும்மிடிப்பூண்டி புகை வண்டிப் பாதையில் ஒற்றியூர் ரயில் நிலையம் உள்ளது. 5 ஏக்கர் நிலப்பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது. பட்டினத்து அடிகளார் 'ஓடுவிழுந்து சீப்பாயும் ஒன்பது வாய்ப் புண்ணுக்கு இடுமருந்து, தேவாதி தேவன் திருவொற்றியூர்த் தெருவில் போவார் அடியின் பொடி' என்று பாடிய திருவொற்றியூர் மண், திருமண், பிறவி நோய்க்கு மருந்து. ஒற்றியூரைப் போற்றும் இவர் பாடல்

"கண்டம் கரியதாம் கண்மூன்று உடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம் தொண்டர்
உடல்உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடல்அருகே நிற்கும் கரும்பு"

திருவொற்றியூர்த் தலம் கடல் அருகே நிற்கும் கரும்பாகும்!

பண்டை வளம் செறிந்த தொண்டை நன்னாட்டில் 32 திருத்தலங்கள் உண்டு. அதில் பெரும்புகழ் பெற்றதும், பழைமை மிக்கதும் திருவொற்றியூர்த் திருத்தலமாகும். 'பூவுலகச் சிவலோகம்' என்று இக்கோயில் போற்றப்படுகிறது. 'முக்தித்தலம்' என்றும், 'ஆதிபுரி' 'பூங்கோயில்' என்றும் இதனைப் போற்றுவர்.

பெயர் வந்தது ஏன்?

பதுமகற்பத்தில் பிரளயகாலம் வரும்போது பிரமதேவர் சிவனது அருள் வேண்டித் தவமிருந்தார். தவத்திற்குப் பயனாக சிவபெருமான் யோகாக்கினி நடுவில், விசித்திர வடிவோடு இக்கோயிலில் தோன்றினார். அக்னி வடிவாய் தீண்டாத் திருமேனியாய், அருவநிலையில் சித்சக்தி எனும் தர்ப்பநாயகி அம்மையுடன் ஆலயம் கொண்டார்.

அக்னி குண்டம் ஆலயமாயிற்று. பிரமன் வேண்டுகோளை ஏற்றுப் பிரளய வெள்ளத்தை விலகச் செய்து (ஒற்றியிருக்கும் படிச்செய்து) உலகைப் படைக்க பிரமனுக்கு அருள் செய்தார். ஊழி வெள்ளமே ஒற்றி (விலகி) நின்றதால் இவ்வூர் ஒற்றியூர் ஆயிற்று என்கிறது தலபுராணம். இறைவனால் ஒற்றி (அடகு) வைக்கப்பட்ட ஊர் என்றும் கூறுவர். வாசுகி என்னும் பாம்பின் படத்தை ஈசன் தன்னுள் ஒற்றிக் கொண்டமையால் (ஒடுக்கிக் கொண்டமையால்) ஒற்றீசர் ஆனார். இவ்வூரும் ஒற்றியூர் ஆனது.

அயோத்தியை ஆண்ட மாந்தாதா என்னும் சூரிய குலமன்னன் சிவத்தலங்கள் உட்பட எல்லா ஊர்களுக்கும் வரி விதித்தான். வரி பற்றிய தனது ஆணையை ஓலைச் சுவடியில் எழுதி அனுப்பினான். அவ்வோலை இவ்வூருக்கு வந்ததும், அரசனுக்கும், ஓலைநாயகத்துக்கும் தெரியாதவாறு, வரி பிளந்து, 'இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாகக் கொள்க' என்று ஓலையில் எழுதப்பட்டிருந்தது. ஓலைச் சுவடியில் இறைவனே திருத்தல் செய்ததால் இவ்வூருக்கு வரியிலிருந்து விலக்கு (Tax Exemption) அளித்தான் மன்னன். வரியிலிருந்து ஒற்றி (விலக்கி) வைத்ததால் ஒற்றியூராயிற்று என்றும் கூறுவர்.

"ஏட்டுவரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும்
நாட்டமலரும் திருநுதலார்"

என்கிறது பெரியபுராணம். இதனால் இவ்வூர்ப்பிரானுக்கு 'எழுந்தறியும் பெருமாள்' என்ற பெயர் வழங்கப்பட்டது. 'ஔதும்பர க்ஷேத்ரம்' என்றும் இக்கோயில் போற்றப்படுகிறது.

மூர்த்தி - தலம் - தீர்த்தம்

உலகில் முதலில் தோன்றிய கோயில் இதுவேயாகும். எனவே இது 'ஆதிபுரி' என்றும், இங்கு முதலில் தோன்றிய இறைவன் 'ஆதிபுரீசுவரர்', என்றும் தலபுராணம் கூறுகிறது.

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி அக்னி வடிவாக இவ்வூரில் இருந்தாலும், தானே எழுந்த சுயம்பு வடிவாக 5 அடி நீளம், 1 அடி அகலம், 3 அடி உயரமுள்ள மூலவர், புற்றுவடிவில் லிங்கமாகக் காட்சி தருகிறார்.

"சமயமேல் ஆறுமாகித் தான்ஒரு சுயம்புவாகி
இமையவர் பரவியேத்த இனிதின் அங்கிருந்த ஈசன்"

என்று அப்பர் தேவாரத்தில் இதனைப்பாடுகிறார். கிழக்கு நோக்கிய சந்நிதியில் புற்றே வடிவமாகத் தீண்டாத் திருமேனியாக இறைவன் விளங்குகிறார். ஒற்றியூர் இறைவனை புற்றிடம் கொண்டார், வன்மீகநாதர், காரணிவிடங்கர், படம்பக்கநாதர். ஆதிபுரீசர், மாணிக்கத்தியாகர், மகிழ்வன லிங்க நாயகர், இளமை தந்தநாயனார் என்று போற்றி மகிழ்வர். வாசுகி பாம்பின் படத்தை சிவன் ஏற்று 'படம் பக்கநாதர்' ஆனார்.

மாணிக்கம் வேண்டி காசியிலிருந்து வந்த இரு ஏழை பிராமணர்களுக்காக, மயிலையிலிருந்த ஏலேலசிங்க செட்டியார் கனவில் தோன்றி, அவர்கட்கு மாணிக்கம் தரச் செய்தார். இதனால் 'மாணிக்கத் தியாகர்' ஆனார். தியாகராஜரின் சன்னதி மிகவும் சிறப்பானதாகும். பத்ம தாண்டவ நடனம் ஆடுவார் இந்தத் தியாகர்.

அம்பாள் திருப்பெயர் திரிபுரசுந்தரி. அப்பரின் அழகு தமிழால் 'வடிவுடை நாயகி' என்று வழங்கப்படுகிறார். தெற்கு நோக்கிய சந்நிதியில் உள்ள அன்னையை கேரள நம்பூதிரிகளே பூசித்து வருகின்றனர்.

சைவர், வைணவர், சாக்தர், உவச்சர், ஆதிசைவர், நம்பூதிரிகள் எனும் அறுவகைச் சமயத்தோரும் ஒருங்குகூடி

வழிபடும் தலம் இதுவாகும். மூன்று நிலைகளில், அருவம் (அக்னி), உருவம் (தியாகராசர்), அருவுருவம் (படம்பக்கநாதர்) என இறைவன் இங்குள்ளார். உரு, அரு, அருவுரு என்ற மூன்று நிலைகளிலும் இங்கு இறைவன் காட்சி தருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இறைவன் கோயிலுக்குள் வடக்குப் பிரகாரத்தில் வட்டப்பாறை அம்மன் தனிச்சிறப்போடு விளங்குகிறாள். ஆதிசங்கரர் ஸ்ரீசக்கரம் ஸ்தாபித்த வட்டப்பாறை, அம்மனுக்கு எதிரேயுள்ளது. கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு அருள் செய்தவள் இந்த வட்டப்பாறை அம்மன். இந்த சன்னதியில் இருந்துதான் கம்பர் இராமாயணத்தை எழுத, வட்டப்பாறை அம்மன் தீப்பந்தம் காட்டி அருளினார்.

கோயிலுக்கு உள்ளே நந்தி தீர்த்தமும், வெளியே பிரம்ம தீர்த்தமும் உள்ளன.

தலமரம் **அத்தி** மரம். சிறப்புக்கு உரியது மகிழமரம் ஆகும்.

'குணாலயம்' என்றும் இக்கோயிலுக்குப் பெயருண்டு, இங்கு உள்ள குணாலய ஏரம்ப விநாயகர் இராமலிங்க அடிகளாரால் பாடப்பெற்றவர். 'குணாலயச் செல்வர்' என்று ஈசனின் பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது.

ஒருமுகம், நான்கு கரங்களும் கொண்டு, படம்பக்க நாதருக்கு பின்னால் உள்ள அருள்சோதி முருகன், அருணகிரிநாதரால் பாடப்பட்டவர். இராமலிங்கரால் வணங்கப் பெற்றவர். மறைமலையடிகளின் தீராத வயிற்று நோயைத் தீர்த்து வைத்துப் போற்றப்பட்டவர். ஸ்ரீசிதம்பரநாத முனிவரால் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழில் பாடப்பட்டவர்.

இத்திருக்கோயிலில் யோக நிலையில் அமர்ந்துள்ள கௌடீசுவரர், இமயச்சாரலிலிருந்து இங்கு வந்து வழிபட்ட கௌடதேச ஆதிசைவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவர். 'ஓம்' என்ற பிரணவ சப்தம் அங்கு ஒரு காலத்தில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

குழந்தையீசர், தியாகராஜர், ஜகநாதர், நால்வர், சுந்தரர், சங்கிலியார், சகஸ்ரலிங்கம், ஆகாசலிங்கம்,

அமிர்தகண்டீசுவரர், 27 நட்சத்திர லிங்கங்கள், அண்ணாமலையார், ஜம்புகேசுவரர், நாகலிங்கம், மீனாட்சி சுந்தரேசுவரர், பைரவர், ஏகபாததிரிமூர்த்தி ஆகியோர் சந்நிதிகள் சிறப்புடையன. பஞ்சபூத லிங்கங்களுக்கும் தனிக்கோயில்கள் வெளிப்பிரகாரத்தில் உள்ளன.

திருக்கோயில் கலைநயமிகு சிற்பக் கூடமாகக் காட்சி தருகின்றது. சுஜபிருஷ்ட விமானம், வசந்த மண்டபம், தியாகராஜர் சந்நிதி கலைநுட்பக் கதவுகள், நந்திபீட விதான சிற்பங்கள் காணத்தக்கனவாகும். பிற்காலத்தில் கட்டப்பெற்ற திருவொற்றீசுவரர் கோயிலும், இராமநாதர் பர்வதவர்த்தினி சன்னிதிகளும் சிறப்புடையன.

ஏராளமான கல்வெட்டுக்கள் இக்கோயில் முழுதும் காணப்படுகின்றன. இங்கு சோழர், பாண்டியர், பல்லவர், இராஷ்டிரகூடர் கால கல்வெட்டுகள் உள்ளன.

'புவியுள் சிவலோகம்' என்று இவ்வூரைப் பெரியபுராணம் போற்றுகிறது.

"ஒற்றியூர் தொழ நம்வினை ஓயும்" என்கிறது தேவாரம்.

'எண்ணில் பெருமை ஆதிபுரியில்' வந்து வழிபட்டு அருள் பெற்றோரை இனி தரிசிப்போம்.

தொண்டை நாட்டுச் சப்த விடங்கத் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும்.

வழிபட்ட தெய்வங்கள் ஐவர்

உமையம்மை சிவன் மூலம் இவ்வூர்ச் சிறப்புகளை அறிந்து வணங்கினாள் என்று தலபுராணம் கூறுகிறது.

கலைமகள் இவ்வூரை வழிபட்டு அருள் பெற்றாள்.

நான்முகன் தவம் செய்து, இவ்வூர் இறைவனை அக்னி வடிவில் தரிசித்து சத்தியலோகம் பெற்றார். பிரமனுக்கு அருள் செய்ததால் 'பிரமீசர்' என்று இறைவன் அழைக்கப்படுகிறார்.

திருமால் தவம் செய்து இவ்வூரை வழிபட்டு வைகுண்டம் பெற்றார். திருமாலுக்கு அருள் செய்ததால், 'திருமாலீசர்' என்ற பெயர் இறைவனுக்கு உண்டு.

இராமனின் மகன் லவன் குதிரை மீதேறி இவ்வூர் வந்து இறைவனைப் பிரதோஷ காலத்தில் வழிபட்டு அருட்காட்சி பெற்றார்.

வணங்கிய தேவர்கள் ஐவர்!

இந்திரர் தலைவனாகிய தேவேந்திரன் இறைவனை இங்கு வந்து வழிபட்டு சாப விமோசனம் பெற்றார்.

நந்திதேவர் தியாகராசப் பெருமான் திருநடன தரிசனம் பெற்றார். நந்திக்கு அருள் செய்ததால் இறைவன் 'நந்தீசர்' ஆனார். நந்திக்காக இத்தலத்தில் தியாகராசர் உட்கார்ந்த நிலையில் ஆடிய 18 வகை நடனம் பத்மதாண்டவம் (அந்நடனம்) ஆகும். அமர்ந்தபடி ஆடிய ஆனந்தக் கூத்துகண்டு நந்தி மகிழ்ந்தார். நந்திக்கென வடக்குமாட வீதியில் நந்தீசுவரர் கோயில் தனியாக உள்ளது. தியாகர் வீதியுலாவின்போது இக்கோயில்முன் நின்று நடனக்காட்சி தருகின்றார். நந்திதேவர் மனித உருவில் நின்று காட்சிதரும் இக்கோயில் தனிச்சிறப்பு மிக்கதாகும். பிரதோஷ விழா இங்கு வெகு சிறப்பாக நடக்கிறது.

சந்திரன் இவ்வூர் நந்தவனம் வந்து, மலரெடுத்து வழிபாடு செய்து சாப விமோசனம் பெற்றார்.

மேலும் கல்வெட்டுகளில் 'திருவொற்றியூர் மகாதேவர்' 'சித்தீசர்', 'மகாதேவபட்டாரகர்' (இறைவன்), 'ஒற்றியூர் ஆழ்வார்' 'திருவொற்றியூர் உடையநாயனார்' போன்ற பெயர்கள் இறைவனுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆதிசேடன் இங்கு வந்து பூசித்து முக்தி பெற்றது.

வாசுகி என்ற பாம்பு உபமன்யு முனிவரிடம் சிவதீட்சை பெற்று, இங்குவந்து பூசித்தது. இந்தப் பாம்மை இறைவன் தன்னுடைய திருவுருவில் ஐக்கியம் செய்து கொண்டமையால் இன்றும் இப்பாம்பின் படமே திருமேனியைக் காப்பதால், இவர் 'படம் பக்கநாயகதேவர்', 'படம் பக்கநாதர்' ஆனார்.

தியாகராஜர் அமர்ந்த நிலையில் இத்திருக்கோயிலில் ஆடும் நடனம் பத்மதாண்டவம் என்றும், அந்நடனம் என்றும் பெயராகும். நந்திதேவருக்கு இந்நடனக்காட்சி தந்துள்ளார். இங்கு ஆடும், தியாகரின் 18 திருநடனம்

மிகவும் சிறப்புடையதாகும். இவரது பவனியையும் நடனத்தையும் அருட்பாவில் இராமலிங்க அடிகளார் போற்றி வணங்குகிறார்.

"நந்தி மகிழ்வாய்த் தரிசிக்க நடனம்புரியும் நாயகனார்
அந்தி நிறத்தார் திருவொற்றி அமர்ந்தார் என்னை அணைவாரோ"

"நிருத்தம்பயின்றார், நேசமனத்தர் நீலகண்டர்
ஒருத்தர் திருவாழ் ஒற்றியினார்...."

அருள் பெற்ற முனிவர்கள் பதின்மர்!

நாரதமுனிவர் இவ்வூரை வழிபட்டு அருள் பெற்றார்.

வேதபுருஷன் எல்லா வேதங்களையும் படம்பக்க நாதர் முன்பு வைத்து தூய்மை செய்து கொண்டார்.

வான்மீகிமுனிவர் வாழ்ந்த இராமாயண காலம் கி.மு. 6000 எனப்படுகிறது. இவர் இங்கு வந்து வழிபட வேண்டினார். ஆனால் இறைவனால் வழி காட்டப்பட்டு மருந்தீசுவரர் கோயில் சென்று வழிபட்டார். எனவே அப்பகுதி திருவான்மியூர் ஆயிற்று.

வியாசமுனிவர் வாழ்ந்த மகாபாரத காலம் கி.மு. 3000 எனப்படுகிறது. இவர் சூத முனிவருக்கு இக்கோயில் பற்றி உபதேசித்தார்.

அகத்தியர் கைலாய திருமணக்காட்சியை இங்கு கண்டு மகிழ்ந்தார். அகத்தியருக்கு திருமணக் காட்சி தருவது இவ்வூரில் சிறப்பான திருவிழா ஆகும்.

சூதமுனிவர் தம் சீடர்களுக்கு இதன் சிறப்புக்களைக் கூறினார்.

ரோமஜன்மர் வழிபட்டு அருள் பெற்றார்.

உபமன்பு முனிவர் வாசுகிக்கு, சிவ தீட்சை தந்து அருள் பெற்றார்.

பாணினி வடமொழி இலக்கணம் வியாகரணத்தை இங்கே வைத்தே அரங்கேற்றினார். பாணினி வியாகரண தான மண்டபம் என்று இங்குள்ள வசந்த மண்டபம் அழைக்கப்பட்டது.

வாகீசர் வழிபட்டு அருள் பெற்றார். அகத்தியர் முதலான சித்தர்கள் வழிபட்டதால் 'சித்தீசர்' எனவும் இறைவன் அழைக்கப்படுகிறார்.

திருப்பணி செய்த அரசர்கள் எண்மர்!

அயோத்தி மாந்தாதா இந்தக் கோயிலுக்கு மட்டும் வரிவிலக்கு (Tax Exemption) அளித்தார்.

முசுகுந்த மாமன்னர் ஆதிசேட தீர்த்தத்தில் மூழ்கி இளமை பெற்றார்.

ஏலேலசிங்கர் மயிலையில் வாழ்ந்த திருவள்ளுவரின் மாணாக்கர் பெருவணிகர். இவர் அந்தணருக்காக வழங்கிய மாணிக்கங்களுக்காக தியாகராசரிடம் மாணிக்கம் பெற்றார். இதனால் இறைவன் 'மாணிக்கத்தியாகர்' என்றழைக்கப்பட்டார்.

கி.பி. 750-இல் தொண்டைமான் சக்கரவர்த்தி திருக்கோயில் முழுதும் திருப்பணி செய்தார்.

கி.பி. 1000-இல் முதலாம் இராசராசன் மண்டபம் கட்டித் தந்தார்.

கி.பி. 1100-இல் முதற் குலோத்துங்க சோழன் பல்வேறு திருப்பணிகள் செய்ததை விரிவாகக் கல்வெட்டு கூறுகிறது.

கி.பி. 1300-இல் இரண்டாம் குலோத்துங்க சோழன் வட்டப் பாறையம்மன் கோயிலையும், மூன்றாம் குலோத்துங்க சோழன் திருமதில்களையும், மண்டபங்களையும், கோபுரங்களையும் அமைத்தான். சோழர், பாண்டியர், பல்லவர் இந்தக் கோயிலுக்குத் தந்த பல்வேறு மானியங்களைக் கல்வெட்டுகள் பலவாறு விரிவாகக் கூறுகின்றன.

பக்தி செய்த நாயன்மார்கள் அறுவர்!

தெய்வச் சேக்கிழார் பாடிய பெரிய புராணத்துள் உள்ள ஆறு நாயன்மார்கள் இத்திருக்கோயிலைச் சார்ந்த பெருமைக்குரியோர்.

கி.பி. 600-இல் ஐயடிகள் காடவர்கோன் திருக்கோயில் தோறும் சென்று ஒரு வெண்பா பாடினார். இங்கு வந்து

பாடியது 22 ஆவது க்ஷேத்திர வெண்பா ஆகும். இது 11ஆம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது.

"தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்டு
எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன் நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண்டு இருக்கப் பெறின்."

- ஐயடிகள் காடவர்கோன்

கி.பி. 700-இல் தெய்வக்குழந்தை திருஞானசம்பந்த மூர்த்தியார் இக்கோயிலைத் தரிசித்து, 1 பதிகம் 11 பாடல்கள் பாடியுள்ளார். இதில் திருவொற்றியூரின் வயல் வளமும், கடல் வளமும் போற்றப்படுகின்றன.

கி.பி. 700-இல் திருநாவுக்கரசராகிய அப்பர் பெருமான் 5 பதிகங்கள் பாடியருளினார். இதில் 43 பாடல்களே கிடைத்துள்ளன. 8 பாடல் கிடைக்கவில்லை. அப்பர் பாடியவை அத்தனையும் பக்திச்சுவை மிக்க அருட்பாடல்கள்.

கி.பி. 800-இல் சுந்தரமூர்த்தி நாயனார் மாசி மகந்தன்னில், மகிழ மரத்தடியில் மங்கை சங்கிலியை மணங்கொண்டார். கொடுத்த வாக்கினை மீறி எல்லை கடந்து நடந்தார். இரு கண்களையும் இழந்தார். கண் இழந்து பாடிக் கதறிய பதிகங்கள் கல் நெஞ்சையும் கரைய வைப்பன.

"வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால் மற்றுநான் அறியேன்...
கண்ணுக்கொரு மருந்து உரையாய் ஒற்றியூர்
எனும் ஊர் உறைவானே"

இவர் 2 பதிகங்கள் 20 பாடல்கள் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் வைப்புத்தலமாக திருவாசகத்தில் ஒற்றியூரைக் குறிப்பாகக் காட்டியுள்ளார்.

சங்கிலி நாச்சியார் ஞாயிறெனும் ஊரில் பிறந்து, வளர்ந்து ஒற்றியூரில் பூ கட்டித்தந்து தொண்டு செய்து, சுந்தரரை மாசி மகத்தினில் நிபந்தனையுடன் மணந்து, பிறகு பிரிந்து, முடிவில் இணைந்தார்.

கலியநாயனார் ஒற்றியூர் சக்கரபாடித் தெருவில் வாழ்ந்த தைல வியாபாரி, ஒற்றியூர் கோயிலில் விளக்கு ஏற்றும் தொண்டினை விடாது செய்து வந்தார், செல்வம் தேய்ந்தும், கடன் பட்டும், கூலிவேலை செய்தும் 'மணிவண்ணச் சுடர் விளக்கு மாளில் யான் மாள்வான்' என்று விளக்கு ஏற்ற முடியா நிலையில் அரிவாளால் கழுத்தினை அரிந்து குருதியால் விளக்கு ஏற்றத் துணிந்து, இறையருள் பெற்றார்.

பாடிய இருபத்து மூன்று புலவர்கள்!

ஐயடிகள் காடவர்கோன், தேவாரமூவருடன் இத்தலத்தைப் பாடிய புலவர்கள் பலர்.

கி.பி. 800-இல் ஆதிசங்கரர் ஒற்றியூர் வந்து வட்டப்பாறை அம்மனுக்குச் செய்து வந்த நரபலியை நிறுத்தி, மந்திர ஸ்ரீசக்கர யந்திரத்தை வட்டப்பாறையில் ஸ்தாபித்து, கேரள நம்பூதிரிகளை வடிவுடையம்மன் பூஜைக்கு அமர்த்தினார். வடிவுடை அம்மனைப் போற்றி, 'திரிபுரசுந்தரி அஷ்டகம்' என்ற 8 ஸ்லோகங்கள் பாடியுள்ளார்.

கி.பி. 900-இல் பட்டினத்தார் பேய்க் கரும்பு இனித்ததால் இங்கு வந்து வழிபட்டு 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது' (11-ஆம் திருமுறை) பாடினார். பல தனிப் பாடல்களிலும் ஒற்றியூர் இறைவனைப் போற்றியுள்ளார். விதியை மாற்றிட திருவொற்றியூர் வீதியின் மண்ணை திருநீறாகப் பூசவேண்டும் என்று பக்தி ரசத்துடன் பாடி உருகியுள்ளார்.

**"ஐயும் தொடர்ந்து விழியும்செருகி, அறிவுஇழந்து,
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது,
ஒன்றுவேண்டுவல்யான்
செய்யும் திருவொற்றியூர் உடையீர், திருநீறும் இட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்துஎழுத்து ஓதக்கற்பியுமே"**

**"வாவியெல்லாம் தீர்த்தம், மணல் எல்லாம் வெண்ணீறு
காவனங்கள் எல்லாம் கணநாதர் பூவுலகில்
ஈது சிவலோகம் என்றுஅன்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திருவொற்றி யூர்"**

"ஒடுவிழுந்து சீப்பாயும் ஒண்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்தை யான்அறிந்து கொண்டேன் கடுவருந்தும்
தேவாதி தேவன் திருவொற்றியூர்த் தெருவில்
போவார் அடியின் பொடி."

"சுடப்படு வார்அரி யார்புரம் மூன்றையும் சுட்டபிரான்
திடப்படு மாமதில் தென்ஒற்றி யூரன்தெருப் பரப்பில்
நடப்படுவர் பொறப்பதம் நம்தலை மேல்படநன்கு உருண்டு
கிடப்பது காண்மனமே விதிஏட்டைக் கிழிப்பதுவே"

என்று போற்றிய பட்டினத்தார் ஒற்றியூர் கடற்கரையருகே பூமிக்குள் புதை மணலில் புதைந்து சிவலிங்கமாகி ஜீவசமாதியில் முக்தி பெற்றார். இவரது சமாதி திருக்கோயில் கடற்கரையருகேயுள்ளது.

கி.பி. 1200-இல் கம்பர் இங்கிருந்த சதுரானன பண்டிதரிடம் வால்மீகி ராமாயணத்தைப் பகல் முழுதும் கேட்டு இரவெல்லாம் தமிழில் பாடினார். கேரள நாட்டைச் சேர்ந்த சதுரானனர் பன்மொழி, பல்கலை அறிஞர், இவரது சதுரானன மடத்தில் தங்கி பலரும் பல கலைகளையும் கற்றதை கல்வெட்டு கூறுகிறது. இவரிடம் கம்பர் வால்மீகி இராமாயணத்தைக் கற்றார்.

திருவொற்றியூரில் சதுரானன பண்டிதர் மடம் நிறுவினார். இவர் பலகலையும் பயின்ற கேரள நாட்டுத்துறவி" என்று கல்வெட்டுக்களை ஆதாரம் காட்டித் 'தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்' நூல் (பக். 356) கூறுகிறது.

வட்டப்பாறையம்மன் தீப்பந்தம் ஏந்தி நின்று கம்பனைப் பாட வைத்தாள் என்ற செய்திக்கு சான்று கூறும் கம்பர் பாடல்:

"ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே
வெற்றியூர்க் காகுத்தான் மெய்ச்சரிதை பற்றியே
நந்தாது எழுதுதற்கு நல்லிரவில் மாணாக்கர்
பிந்தாமல் பந்தம் பிடி"

கி.பி. 1400-இல் காளமேகப் புலவர் தியாகராசர்மேல் இரு சிலேடைப் பாடல்கள் பாடி மகிழ்ந்தார். தியாகராசரின்

பவனி ஓட்டமும் ஆட்டமும் பற்றி அற்புதமாகப் பாடியுள்ளார்.

"ஆடும் தியாகரே ஆட்டமேன் தான்உமக்கு
வீடும் சமுசார மேலிட்டுக் கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவர் இரண் டாச்சே
இருக்கும்ஊர் ஒற்றியாச் சே"

உமாபதி சிவாச்சாரியார், சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பாக் கண்ணியில் (263) ஒற்றியூரைப் பாடி மகிழ்ந்துள்ளார்.

கி.பி. 1500-இல் சந்தப்புகழ் சிந்துக்கவி மன்னர் அருணகிரிநாதப் பெருமான் இவ்வூர் முருகனை வழிபட்டு இரண்டு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியருளினார்.

"திருவளரும் ஆதி புரியதனில் மேவு
ஜெயமுருக தேவர் பெருமாளே"
"திருவொற்றியூர் மருவு நகர்ஒற்றியூர் வாரிதிரை
அருகுஉற்றிடும் ஆதிசிவன் அருள்பாலா"

- திருப்புகழ்

இதே நூற்றாண்டில் இரட்டைப் புலவர்கள் விழிகளற்ற இளஞ்சூரியரும், கால்களற்ற முதுசூரியர் ஆன இருவரும் தியாகராசப் பெருமான் மேல், சில பாடல்களைப் பாடி வழிபட்டுள்ளார்கள்.

கி.பி. 1800-இல் ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் சங்கீத மும்மூர்த்திகளில் முதன்மையான இவர், திருவொற்றியூர் பஞ்சரத்னக் கீர்த்தனைகள் வடிவுடை அன்னையின்மேல் (5 கீர்த்தனைகள்) பாடியுள்ளார்.

ஸ்ரீமுத்துசாமி தீட்சதர் சங்கீத மும்மூர்த்திகளில் இரண்டாமவர். இவர் 'ஆதிபுரீஸ்வரம்' எனும் ஒரு கீர்த்தனையை ஆரபி ராகத்தில் ஆதி தாளத்தில் ஒற்றியூரைப் போற்றியுள்ளார்.

"ஆதிபுரீஸ்வரம் சதா பஜேகம்
த்ரிபுர சுந்தரி சமேதவர குருகுக ஜனகம்"

கி.பி. 1600-இல் ஒற்றி கமலை ஞானப்பிரகாசர், அழகிய செய்யுள் நடையில் 'திருவொற்றியூர்த் தலபுராணம்' பாடியுள்ளார்.

"காராரு மால்அயனார் கைத்தாள முழவுஒலிப்ப
வாராரும் தனத்து உமையாள் கண்டு உவந்து மனம் உருக
தாராரும் சடைஅசையப் பத்மதாண்டவம் ஆடும்
சீராரும் ஆதிபுரித்தியாகர் திருவடி போற்றி

- திருவொற்றியூர்த்தல புராணம்

கி.பி. 1835 முதல் 1858 வரை அருட்பிரகாச இராமலிங்க அடிகளார் 23 ஆண்டுகள் நாள் தவறாது நடந்து வந்து ஒற்றியூரை வணங்கி அருள் பெற்றுள்ளார். இறைவன்மேல் 'எழுத்தறியும் பெருமான் மாலை' 31 பாடல்களும், இறைவிமேல் 'வடிவுடை மாணிக்க மாலை' 102 பாடல்களும் பாடியுள்ளார்.

"வாழ்நாள் அடைவர், வறுமையுறார், நன்மனை, மக்கள், பொன்,
பூண், ஆள், இடம், புகழ், போதம் பெறுவர், பின் புன்மை ஒன்றும்
காணார், நின்நாமம் கருதுகின்றோர், ஒற்றிக்கண்ணுதல்பால்
மாணார்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே"

-வடிவுடை மாணிக்கமாலை 39

அருட்பாவில் இரண்டாம் திருமுறை முழுதும், 3780 பாடல்கள் ஒற்றியூரின்மேல் வள்ளற்பெருமான் பாடியுள்ளார். ஞானவாழ்க்கையைத் தனது 12 ஆவது வயதில் தொடங்கியது முதல், 35ஆவது வயதில் சென்னையை விட்டுக் கருங்குழி புறப்படும்வரை, நாள் தவறாது ஒற்றியூர் நடந்து வந்து வழிபட்டு பல அருள் அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

ஒருநாள் ஒற்றியூர் வந்து வழிபட்டு, சென்னை ஏழுகிணறு பகுதி வீட்டுக்கு நடந்து சென்றார். இரவு காலங்கடந்ததால் திண்ணையில் பசியோடு படுத்து அயர்ந்தார். வடிவன்னையே அண்ணியார் வடிவில் தோன்றி அமுது அளித்து அருளினார்.

"தெற்றியிலே நான்பசித்துப் படுத்துஇளைத்த தருணம்
திருஅமுதுஓர் திருக்கரத்தே திகழ்வள்ளத்து எடுத்தே

ஓற்றியில்போய்ப் பசித்தனையோ என்று எனையங்கு எழுப்பி
உவந்துகொடுத்து அருளியஎன் உயிர்க்குஇனிதாம்தாயே

-அருள் விளக்கமாலை 43

கி.பி. 1850இல் தோன்றிய பாம்பன் சுவாமிகள் ஒற்றியூரைத் தரிசித்து பாடல்கள் பாடியுள்ளார்.

கி.பி. 1800-இல் வீணை குப்பையர் என்ற தியாகராஜ சுவாமிகளின் சீடர், ஒற்றியூர்மேல் பல கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

கி.பி. 1898 ஜூன் 27ஆம் நாள், மறைமலை அடிகளார் தனது தீராத வயிற்று நோயைத் தீர்த்த ஒற்றியூர் முருகன்மேல் "திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை" 30 பாடல்கள் பாடியுள்ளார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் 'சிவாலய மான்மியக்கோவை'யில் 256 பாடலாக ஒற்றியூரைப் பாடியுள்ளார்.

ஸ்ரீசிதம்பரநாதமுனிவர், க்ஷேத்திரக்கோவை பிள்ளைத் தமிழில் திருவொற்றியூர் முருகனைப் பாடிப் போற்றியுள்ளார்.

"பட்டினத்துப் பிள்ளை சிவலிங்க வடிவுறப்
பாடிடும் பாமாலைகொள்
திருவொற்றி யூர்மேவி வாழ் குமர நாயகா
சிறுபறை முழக்கி அருளே"

-க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ்

'திருவொற்றியூர் செங்குந்த விநாயகர் மாலை' எனும் 32 பாடல்கள் அடங்கிய சிற்றிலக்கியத்தை ஸ்ரீபடம்பக்கநாதப் புலவர் பாடியுள்ளார். கி.பி. 1891-இல் பூவை அஷ்டாவதானம் கல்யாணசுந்தரர் 'திருவொற்றியூர் கலம்பகம்' 101 பாடல்கள் பாடியுள்ளார்.

"மகா மனுஸ்தவம்"

கி.பி. 1856 முதல் 1953 வரை வாழ்ந்தவர் வேதரிஷி கபாலி சாஸ்திரியார். இவர் தனது தந்தையாரிடம் சிறுவயதில் ஸ்ரீவித்யா உபதேசம் பெற்று நாள்தோறும், திருவொற்றியூர் கோயிலுள்ள வடிவுடை அன்னையின் சன்னதியில் அமர்ந்து 1008 முறை ஜபம் செய்து அருட்காட்சி கண்டார். வடிவுடை

அன்னையைப் போற்றி சமஸ்கிருதத்தில் 'மகா மனுஸ்தவம்' 32 ஸ்லோகங்கள் பாடினார்.

திருமதி விஜயா சங்கரநாராயணன் இதைத் தமிழில் மொழிபெயர்த்து அம்மன் ஆலயத்துள் பதித்துள்ளார்.

'வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ்' என்ற இலக்கியத்தை கனகசபைத் தம்பிரான் பாடியுள்ளார்.

'ஸ்ரீவடிவுடை அம்மன் விருத்தம்' எனும் பெயரில் பழம் பாடல்கள் 11 பலராலும் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.

'வடிவுடையம்மன் திருப்பள்ளியெழுச்சி' 30 பாடல்களை புலவர் என், நடராஜன் பாடியுள்ளார்.

அருட்கவி சாதுராம் சுவாமிகள் 'வடிவுடைநாயகி அம்மை விருத்தம்' எனும் 15 பாடல்கள் இயற்றி வெளியிட்டுள்ளார்.

1950-இல் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் தனது தீராத நோய் தீரவேண்டி 'திருவொற்றி வடிவுடை அம்மை அருள்வேட்டல்' 101 பாடல்கள் பாடி நலம் பெற்றுள்ளார்.

அருள் நாடிய அடியவர் இருவர்!

கி.பி. 1936இல், புதிதாக ஒற்றீசுவரர் கோயிலைக் கட்டி குடமுழுக்கு செய்தவர் திருவொற்றியூரான் அடிமை என்பவர் ஆவார். இவர் 12 ஆண்டுகள் சூளை மேட்டிலிருந்து நாள் தவறாது, மகன் இறந்த நாளன்றும் வந்து தரிசித்தார். 14 ஆண்டுகள் முனைந்து கோயிலைக் கட்டி முடித்தார். ஒற்றீசுவரர் பெயரால் ஒரு பள்ளியும், மருத்துவமனையும் நிறுவியுள்ளார்.

பாடகச்சேரி இராமலிங்கர் எனும் துறவி, வந்து வழிபட்டு பட்டினத்தார் கோயில் தெருவில் பெரிய மடம் அமைத்துள்ளார்.

இராமலிங்க சுவாமிகள் ஆலயம் இங்கு சிறப்பாக அமைந்துள்ளது. கி.பி. 1940-இல் திரு.வி. கல்யாண சுந்தரர் போராடி வட்டப்பாறை அம்மனுக்கு மிருக பலி இடுவதை தடுத்து நிறுத்தினார்.

வட குருத்தலம்

ஒற்றியூர் ஆலயத்தின்முன் 16 கால் மண்டபத்தின் எதிரில் வடகுருத்தலத்தில், வடக்கு நோக்கிய நிலையில், 10 அடி உயரத்தில் யோக தட்சிணாமூர்த்தி விளங்குகிறார். வடிவன்னை தெற்கு நோக்கி உள்ளதால், அவருக்கு ஞான உபதேசம் செய்ய இவர் அதிசமயாக வடக்கு நோக்கியுள்ளார். 300 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கருதப்படும் இந்த ஆலயத்தில் பஞ்சமுகவிநாயகர் சிம்ம வாகனத்தில் உள்ளார். நவக்கிரக பரிகாரத்தலம் இதை வழிபட்டு குருபலன்பெற வியாழன் அன்றும், குருபெயர்ச்சி அன்றும் பல்லாயிரம் பக்தர் கூடுகின்றனர்.

வழிபடுவோம் வாருங்கள்!

“ஒற்றியூரன் பாதம் ஏத்த மறையும் நம் பாவமே” எனத் தேவாரம் கூறியபடி அடியவர் பலர் தொழுது அருள் பெற்ற திருவொற்றியூரை, நாமும் வழிபட்டு அருள் பெறுவோம் வாருங்கள்! கனிந்து வேண்டுவோருக்கு, கற்பக மரமாய், காமதேனு வாய் தியாகரும், வடிவன்னையும் வரம் தருவர்.

திருவொற்றியூர் - என்பதில் ஒற்றெழுத்து இரண்டையும் நீக்கினால், ஐந்து எழுத்தாகும். ‘நமச்சிவாய’ எனும் ஐந்தெழுத்துக்கு உரிய சிறப்பை ‘தி’ருவொற்றியூர்’ என்று சொன்னாலே பெறலாம்.

ஒப்பிலாத் தலம் ஒற்றியூரை வழிபட்டோம்! அருள் பெறுவோம்! ஆனந்தம் பெறுவோம்!

“ஆலைக் கரும்பொடு செந்நெல் கழனி அருகணைந்த
சோலைத் திருவொற்றி யூரை எப்போதும் தொழுமின்களே”

- அப்பர் தேவாரம்

“திருமகள், கலைமகள், சிறந்தஞானமாம்
குருமகள் மூவரும் கூடிவாழ்வது
தெருமரல் அகற்றும் எம்சிவபிரான்மலை
ஒருமகள் உடன்உறை ஒற்றிமாண்பதி”

- இராமலிங்க வள்ளலார் திருவருட்பா

ஒற்றியூர் பிரதோஷப் பெருமை

"விடையவன் விண்ணும் மண்ணும் தொழநின்றவன்
வெண்மழுவாள்;
படையவன் பாய்புலித் தோலுடை கோவணம் பல்கரந்தைச்;
சடையவன் சாமதேவன் சசிதங்கிய சங்கவெண்தோடு;
உடையவன் ஊனமில்லி உறையும் இடம் ஒற்றியூரே!"

என்று திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பாடுகிறார்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன், ஒற்றியூரில் யாவரும் தொழுதற்கு எளியவனாகி நிற்கும் சிவபிரானை, ஞானக் குழந்தை பாடும்போது "விடையவன்" காளையை வாகனமாக உடையவன் என்று போற்றுகிறார். நமது மனக்கோணல்களுக்கும் கேள்விக்கும், ஞான விடையாக இருப்பவன் "விடையவன்" சிவபெருமான். இவரை வழிபட்டு, நாளும் சுமந்து செல்லும் பாக்கியம் பெற்றவர் நந்தி தேவர். சிவன் அருள் நடனம் செய்யும் பிரதோஷ காலத்தின் தத்துவத்தை இனி காண்போம்.

பிரதோஷ தத்துவம்

பிரதோஷ காலம் அனுதினமும் சூரியாஸ்தமனத்திற்கு முன் 3 1/4 நாழிகையும் அஸ்தமனத்திற்கு பின் 3 3/4 நாழிகையும் கொண்ட 7 1/2 நாழிகை 3 மணி நேரம் 180 நிமிடம் ஆகும். (ஒரு நாழிகை என்பது 24 நிமிடம்)

பிரதோஷ காலம், ஆன்மாவாகிய நாம், உலக கருத்தாவாகிய பரமேசுவரனைத் தியானம் செய்வதற்குத் தகுந்த காலமாகும். அதாவது பரமேஸ்வரனை தன்வசப்படுத்திக் கொள்ளும் காலம், மிகவும் விசேஷமாகும். உலகம் ஒடுங்குகிறது. மனதும் ஈசுவரனிடம் ஒடுங்க அதுவே நல்ல நேரம், பகலின் முடிவு, சந்தியா காலத்தின் ஆரம்பம். சிருஷ்டி முடிவு பெற்று, தன் சொரூபத்தில் அடக்கிக் கொள்ளும் நேரம்.

பிரதோஷ காலத்தில் ஈசுவரன் எல்லாவற்றையும் தன்னிடம் ஒடுக்கிக் கொள்வதால், வேறொரு வஸ்து இல்லாத நேரமாக அது அமையும்.

உதயத்தில் சிருஷ்டியும், ப்ரதோஷ காலத்தில் சம்காரமும் நடக்கின்றன. இராத்திரி ஆரம்பத்தை தான் பிரதோஷ காலம் என்கிறோம். அதனால்தான் இரவு நித்தியபிரளய காலமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. நித்திய சிருஷ்டியும், நித்திய பிரளயமும் நடக்கின்றன. இரவில் பறவைகள்,. மாடுகள் முதற்கொண்டு ஒடுங்கிக் கொள்கின்றன. குழந்தைகள் கூட தம் விளையாட்டை முடித்துக் கொண்டு வீட்டுக்குள் ஒடுங்கிக் கொள்கின்றனர். உலகமே செயலற்றுக் கிடக்கிறது.

அந்தக் காலம்தான் சித்தத்தை ஏகாந்தமாக லயிக்க வைப்பதற்கு ஏற்றகாலம். ஒருவராக இருந்து நித்தியப் பிரளய நேரத்தில் சிவபெருமான் நடனம் செய்கிறார். எல்லாம் அதில் லயித்து விடுகிறது.

அப்போது சஞ்சாரம் செய்யும் பூதப் பிசாசுகள் கூட அந்த நர்த்தனத்தில் லயித்து யாருக்கும் உபத்திரவம் கொடுக்க மாட்டா.

விடியற்காலையில் விஷ்ணு நாமமும், சாயங்காலத்தில் சிவநாமமும் உச்சரிக்க உகந்தவை. நடராஜ மூர்த்தியின் பெயரை உச்சரிக்க பிரதோஷ காலம் சிறந்தது.

சிவனை வழிபாடு செய்வதற்கு எல்லோர்க்கும் வீட்டில் வசதி இருக்காது. ஆதலால் நாமும், நாடும் நலம் பெற; பெரிய சிவன் கோயில்களைக் கட்டினார்கள். பிரதோஷ காலத்தில் பரமேசுவரன் உலகசக்தி முழுவதையும் தன் வசம் ஒடுக்கிக் கொண்டு நர்த்தனம் செய்யும் வேளையில் நாம் ஈசுவரனையே வழிபட வேண்டும்.

வளர்பிறை, தேய்பிறையின் பதின்மூன்றாம் நாள் திரியோதரி திதியில், மாலைக் காலத்தில் பிரதோஷ தரிசனம் செய்தல் வேண்டும்.

பிரதோஷத்தின் வரலாறு

பிரதோஷ காலத்தின் பெருமையை அதன் வரலாற்றைக் கொண்டு அறியலாம்.

பாற்கடல் கடையப்படுகிறது. ஒரு பக்கம் தேவர்களும், மறுபக்கம் அசுரர்களும் மந்திர மலையை மத்தாகவும், வாசுகி பாம்பைக் கயிறாகவும் கட்டி பாற்கடலைக் கடைகிறார்கள்.

வாசுகியின் கொடிய விஷம் பொருந்திய தலைப்பகுதியை அசுரர்களும், வால்பகுதியைத் தேவர்களும் பிடித்து பாற்கடலை கடையும்போது, வாசுகிப் பாம்பின் விஷமும் பெருமூச்சும் பட்டு அசுரர்கள் வடிவம் மாறினர். வலிமையும் இழந்தனர். திருமால் கூர்மாவதாரம், ஆமை வடிவம் எடுத்து, மலை சாயாமல் தூக்கி நிறுத்தினார்.

காமதேனு, கற்பகமரம், தேவமாதர்கள் அதிலிருந்து வந்தனர். யாவரும் போட்டி போட்டுக் கொண்டு வந்து எடுத்துச் சென்றனர். ஆலகால விஷம் வந்ததும், அப்படியே போட்டுவிட்டு யாவரும் ஓடி விட்டனர்.

திருமால், பிரமன், தேவர்கள் யாவரும் சிவனைத் துதித்தனர். ஐந்தொழில் புரியும் கயிலை நாதன், உயிர்களையும் உலகத்தையும் காத்தல் வேண்டி கடுவிஷத்தை உண்டார்.

"நஞ்சும் அமுதாம் எங்கள் நாதற்கு" என்ற வகையில் அன்னை உமாதேவி கயிலை நாதனின் கழுத்தில் கரம் பற்றித் தடவ, நஞ்சு அமுதாக மாறியது. எம்பிரான் 'திருநீலகண்டர்' ஆனார். பதினோராம் பிறையாகிய ஏகாதசியில் விஷமுண்டார். பனிரெண்டாம் பிறையாகிற துவாதசியில் காட்சி தந்தார். பதின்மூன்றாம் பிறையாகிய திரயோதசி மாலை பிரதோஷ காலத்தில் நடன தரிசனம் தந்தார்.

விஷத்தால் அமரர்களுக்கு அடியார்களுக்கும் தோஷம் ஏற்படாமல் காத்த, சிவபெருமானின் அருளுக்கு உகந்த காலம் பிரதோஷகாலம். விஷத்தை உண்டு, ஆனந்தக் கூத்தாடிய சிவனை, பிரதோஷ காலத்தில் நந்தி தேவரின் கொம்புகளின் நடுவே தியானிப்பது சிறப்பாகும்.

பிரதோஷ வகைகள்

சிவபெருமான் விஷமுண்ட நாள் சனிக்கிழமை. எனவே சனிப்பிரதோஷம் மகத்தான பெருமை மிக்கது.

பிரதோஷம் ஐந்து வகைப்படும்

1. *நித்யப் பிரதோஷம்*
2. *பட்சப் பிரதோஷம்*
3. *மாதப் பிரதோஷம்*
4. *மகாப் பிரதோஷம்*
5. *பிரளயப் பிரதோஷம்*

1. *நித்யப் பிரதோஷம் : தினந்தோறும் பிரதோஷ காலத்தில் சிவனை வழிபடல்.*
2. *பட்சப் பிரதோஷம் : சுக்லபட்ச சதுர்த்தியில், பிரதோஷ காலத்தில் சிவனை வழிபடல்.*
3. *மாதப் பிரதோஷம் : கிருஷ்ணபட்ச திரயோதசியில் பிரதோஷ காலத்தில் சிவனை வழிபடல்.*
4. *மகாப்பிரதோஷம் : சனிக்கிழமையில், திரயோதசி வந்தால் அது மிகச்சிறப்புடைய, மகாபிரதோஷமாகும்.*
5. *பிரளயப் பிரதோஷம் : உலகம் அழியும் பிரளய காலத்தில் எல்லாம் சிவனிடம் ஒடுங்குவது பிரளயப் பிரதோஷமாகும்.*

"நந்தி தேவரும் பிரதோஷமும்"

"நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்துஎன் அகம்படி கோயில் கொண்டான். கொள்ள
எந்தை வந்தான் என்று எழுந்தேன் எழுதலும்
சித்தையினுள்ளே சிவனிருந்தான் அன்றே"

- திருமந்திரம் 2641

நந்தியுடன் சிவகணங்கள் ஈசுவரனைப் பணிந்து வணங்கும் பிரதோஷ காலத்தில் நாமும் வழிபட்டால் நன்மைகள் பல பெறலாம்.

சிவசந்நிதியில் காவல் புரியும் நந்தி தேவருக்கு, பிரதோஷ வேளையில் சிவனுக்குச் செய்யும் அத்தனை வழிபாடுகளும் செய்தல் வேண்டும்.

நந்தி தேவர் தர்மமே உருவானவர். 'சிவாய நம' எனும் பஞ்சாட்சர வடிவானவர். சிவனைத் தாங்கும்பேறு பெற்றவர்.

பிரதோஷ காலத்தில் நந்தி தேவருக்கு நெய்விளக்கேற்றி வெல்லம் கலந்த அரிசியை நிவேதனம் செய்தும், அருகம்புல் வில்வதள மாலை, பூக்களிட்டும் பூசித்தல் வேண்டும்.

சிவபெருமானுக்கும் நந்திதேவருக்கும் உகந்த பிரதோஷ விரதத்தின் மகிமைகளை சாண்டில்ய முனிவர் அற்புதமாக கூறியுள்ளார்.

திருவொற்றியூரின் பிரதோஷ மகிமை

ஈது சிவலோகம் என்று அன்றே மெய்த்தவத்தோர் ஓதும் திருவொற்றியூரில் 'பிரதோஷகாலம்' மிகவும் போற்றி வணங்கத் தக்கதாயிருந்ததை 'திருவொற்றியூர் தலபுராணம்' விரிவாகக் கூறுகிறது.

சிவபெருமான் நஞ்சு உண்டு அருளிய பின், தேவர்தொழ ஆடியருளிய திருக்கூத்தினையும் தல புராணம் சிறப்பாகப்பேசுகிறது. "உண்டார் நஞ்சு, உலகுக்கு ஓர் உறுதிவேண்டி ஒற்றியூர் மேயஒளிவண்ணனார்", "வேலைக்கடல் நஞ்சம் உண்டு வெள்ளேற்றோடும் வீற்றிருந்த மாலைச்சடையார்"

"கடலின் நஞ்சமுது உண்டு, இமையோர் தொழுது ஏத்த, நடமாடி அடலை இலங்கையரையன் வலி செற்றருள் எம்மான் அமர் கோயில்" என்று தேவாரமும் நஞ்சு உண்டு ஆடி, உலகைக் காத்த சிவன் அருளைப்பாடுகிறது.

திருவொற்றியூரில் கோயில் தல புராணத்தில் கூறப்படும், தனிச் சிறப்புமிக்க 'பிரதோஷ கால' வழிபாடு பற்றி 'இலவன் வேள்விச் சருக்கம்' கூறும் செய்திகளைக் காண்போம்.

நாரதமுனிவர், இராமன் மகன் இலவனுக்கு திருவொற்றியூரின் பெருமைகளைக் கூறும்போது, இங்கு வந்து படம்பக்க நாதரை பிரதோஷ காலத்தில் தரிசித்தால் மிகப் பெரும் பயன்களை நீ அடைவாய் என்று குறிப்பிட்டார். வடநாடு அயோத்தியிலிருந்து கிளம்பி இலவன் தொண்டை நாட்டு திருவொற்றியூர் நோக்கி வந்தான்.

இலவன் பிரதோஷ வழிபாடு செய்ய திருவொற்றியூர் வரும் வழியில், இடையே பெருமழை வந்தது. பயணம் தடைப்பட்டது. ஒற்றியூர் இறைவனை பிரதோஷ காலத்தில் தரிசிக்க தடையாக பெருமழை வந்ததே' என வருந்தி, தன் உடலை மாய்த்து உயிர் விடத் துணிந்தபோது, காளை வாகனத்தில் 'ரிஷபாரூடராய்' ஒற்றியூர் பிரான், இலவன் இருந்த இடத்திலேயே தரிசனம் தந்து அருளினார். அந்த இடம் இன்றும் 'இலவன் பேரூர்' (போரூர்) என வழங்கப்படுகிறது. அத்தலம் சென்னையிலிருந்து பூவிருந்தவல்லி (பூந்தமல்லி) செல்லும் வழியில் "போரூர்" என வழங்கப்படுகிறது. இங்கு இலவனுக்குக் காட்சி தந்த சிவபெருமானுக்குச் சிறந்த கோயிலும் உள்ளது.

ஒற்றியூர் ஈசன் பிரதோஷ காலத்தில் வழிபாடு செய்வோருக்கு இன்றும் வளங்கள் யாவும் வழங்குகிறார். பிரதோஷ காலத்தில் நந்தியினை வழிபட்டும், ஆலகால விஷம் உண்டு ஆனந்த கூத்தாடிய பெருங்கருணைக் கடல் 'தியாகராஜராகிய சிவபெருமானையும் பக்தியுடன் வழிபட்டும், நாமும் நலங்கள் பல பெறுவோம்.

திருவொற்றியூர் வடக்கு மாட வீதியில் உள்ள, ஸ்ரீநந்தீஸ்வரர் கோயிலுக்கு பிரதோஷ காலத்தில் சென்று வழிபட்டால் மிகவும் சிறந்த பயன்களைப் பெறலாம். 'தவம் அரசிருக்கும் சீர்மிக்கது', 'தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம் மிக்கது' என இந்த நந்தி ஆசிரமத்தை வள்ளலார் போற்றியுள்ளார். மனித உருவில் நந்திதேவர் இருக்கும் இடம் இது ஒன்றே ஆகும்.

பௌர்ணமி - வெள்ளி - தரிசனம்

அன்னை வடிவுடை நாயகியை வெள்ளிக்கிழமையில் வந்து தரிசித்தால், நாம் எண்ணும் காரியங்கள் யாவும் ஈடேறும் என்று தியாகராஜ சுவாமிகள் பஞ்சரத்னக் கீர்த்தனையில் பாடியுள்ளார்.

பௌர்ணமி வெள்ளிக்கிழமையன்று மூன்று திருக்கோயில் களைத் தரிசிக்க ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து சேருகிறார்கள். பூரண அருள்தரும் ஒளிநாள் பௌர்ணமியில், மூன்ற சக்தியையும் வழிபட்டால் பூரண நலம் பெறலாம்.

மேலூரிலுள்ள இச்சா சக்தியான திருவுடையம்மனை காலையிலும், திருவொற்றியூரிலுள்ள ஞான சக்தியான வடிவுடையம்மனை உச்சிகால வேளையிலும், திருமுல்லைவாயிலில் உள்ள கிரியா சக்தியான கொடியுடையம்மனை மாலை வேளையிலும் வழிபட்டால் அருள்நலம் பெறலாம். வெள்ளிக்கிழமையில் வரும் பௌர்ணமி நாளில் இந்த மூன்று சக்திகளையும் வழிபட்டால் கேட்ட வரம் கிடைக்கும்.

கல்வெட்டுகள்

தொன்மையும், பெருமையும் மிக்க இத்திருக்கோயிலில் பலநூறு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை யாவற்றையும் ஆராய்ந்து, தமிழக அரசு கல்வெட்டுத்துறை ஆவணங்களாக வெளியிட்டுள்ளன. South Indian Temple Inscriptions தொகுப்பிலும், Epigraphia India தொகுப்புகளிலும் இக் கல்வெட்டுக்களைக் காணலாம்.

கல்வெட்டுச் செய்திகள்

திருவொற்றியூர் மூலக்கோயில், கி.பி. 1100இல் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. இக்கோயிலைப் புதுப்பித்துக் கட்டிய சிற்பி 'வீரசோழ தச்சன்' என்னும் பெயருடைய 'ரவி' என்னும் சிற்பி.

திருவொற்றியூர் கோயிலில் தேவரடியார், பதியிலார், இஷி பத்தினியார் என்று மூன்று வகையான மகளிர் இருந்தனர். இவர்களில் பதியிலாரும், தேவரடியாரும் சாந்திக்குனிப்பம் என்னும் ஆடல் புரிந்தனர். அவ்வமயம் இஷிபத்தினியார் அக மார்க்கம், வரிக்கோலம் என்னும் இசைப் பாடல்கள் பாடினார்கள்.

- Epigraphia, India Report 1913. Page 127

திருவொற்றியூரில் திருவாதிரை விழாவின்போது திருவெம்பாவை ஓதப்பட்டு வந்தது. 22 தளியிலார் நடனம் ஆடினர். ஒருவன் நட்டுவாங்கம் செய்தான். 16 தேவரடியார்கள் தேவாரப் பதிகங்களை அகமார்க்க முறையில் பாடினார்கள்.

- Epigraphia, India Report 128/12.228/12

- தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் (பக். 337)

சோழர் : சோழ மன்னர்களுள் மதுரைகொண்ட கோபுர கேசரிவர்மன் உத்தமசோழ தேவன், முதலாம் இராசராசசோழன், முதலாம் இராசேந்திரசோழன், முதலாம் இராசாதிராச சோழன், முதற் குலோத்துங்க சோழன் கல்வெட்டுக்கள் உள்ளன.

பல்லவர் : பல்லவ மன்னர்களில் விஜய அபராஜித போத்தரையர், கோவிஜய நிருபதுங்க வர்மர், கோவிஜயகம்ப வர்மர் முதலானோர் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

பாண்டியர் : பாண்டியமன்னர்களில் ஜடாவர்மனாகிய திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டியன் கல்வெட்டு உள்ளது.

இராஷ்டிரகூடர் : இராஷ்டிரகூட மன்னர்களில் காஞ்சி, தஞ்சை ஆண்ட கன்னர தேவர் கல்வெட்டுள்ளது.

விஜயநகரர் : விஜயநகர மன்னர்களில் சாயண்ண உடையார், தேவராய மகாராஜா குமாரர் புக்கண்ண உடையார், வீரப்பிரதாப தேவராய மகாராயர் கல்வெட்டுள்ளது.

சம்புவராயர் : சம்புவராயமன்னர்களில் சகலபுவன சக்கரவர்த்தி, ராஜ நாராயண சம்புவராயர் கல்வெட்டுள்ளது.

மண்டபங்கள் : இராசராச மண்டபம், குலோத்துங்க சோழ மண்டபம், வியாகர்ணதான வியாக்யான மண்டபங்கள் இருந்துள்ளன.

மடங்கள் : சதுரானன பண்டிதர் மடம், குலோத்துங்க சோழன் மடம், இராசேந்திர சோழன் மடங்கள் இருந்தன.

திருவொற்றியூர் வந்து அருள்பெற்ற 60 அடியார்கள்

கடவுளர் - 5

1. கிருதயுகம் - உமையள் - சிவன் மூலம் இவ்வூர்ச் சிறப்புகளை அறிந்து வணங்கினார்.
2. நான்முகன் - தவம் செய்து அதனால் சத்திய லோகம் பெற்றார்.
3. கலைமகள் - இவ்வூரை வழிபட்டு அருள் பெற்றாள்.
4. திருமால் - தவம்செய்து அதனால் வைகுண்டம் பெற்றார்.
5. திரேதாயுகம் - இலவன் - பிரதோஷ தரிசனம் செய்து அருட்காட்சி பெற்றார்.

தேவர்கள் - 5

6. தேவேந்திரன் - வழிபட்டு சாப விமோசனம் பெற்றான்.
7. நந்திதேவர் - தியாகரது திருநடன தரிசனம் பெற்றார்.
8. சந்திரன் - சாப விமோசனம் பெற்று அருட்காட்சி கண்டார்.
9. ஆதிசேடன் - பூசித்து முக்தி பெற்றது.
10. வாசுகி - சிவ தீட்சை பெற்று வணங்கி முக்தி பெற்றது.

முனிவர்கள் - 10

11. துவாபரயுகம் - நாரதர் - வழிபட்டு அருட்காட்சி கண்டார்.
12. வேதபுருஷன் - படம்பக்க நாதரின் முன் வைத்து வேதங்களைத் தூய்மை செய்தான்.
13. கி.மு. 6000 - வான்மீகி - திருவான்மியூர் செல்ல வழி காட்டப்பட்டு அழியாத் தன்மை பெற்றார்.
14. கி.மு. 3000 - வியாசர் - சூதமுனிவருக்கு இக்கோயில் பற்றி உபதேசித்தார்.
15. அகத்தியர் கைலாய திருமணக்காட்சியை இங்கு கண்டார்.

16. சூதர் - இத்தலச் சிறப்புகளை சீடருக்கு உபதேசித்தார்.
17. ரோமஜன்மர் - வழிபட்டு அருட்காட்சி கண்டார்.
18. உபமன்யு - வாசுகிக் சிவதீட்சை தந்து அருள்பெற்றார்.
19. பாணினி - வடமொழி இலக்கணம் வியாகரணத்தை இங்கே அரங்கேற்றினார்.
20. வாகீசர் - வழிபட்டு அருட்காட்சி பெற்றார்.

அரசர்கள் - 8

21. அயோத்தி மாந்தாதா - இக்கோயிலுக்கு மட்டும் வரிவிலக்கு அளித்தார்.
22. முசுகுந்த மாமன்னர் - ஆதிசேட தீர்த்தத்தில் மூழ்கி இளமை பெற்றார்.
23. ஏலேல சிங்கர் - ஒரு மன்னனுக்காக தியாகரிடம் மாணிக்கம் பெற்றார்.
24. கி.பி. 750- தொண்டைமான் சக்கரவர்த்தி - திருக்கோயில் முழுதும் திருப்பணி செய்து காட்டினார்.
25. கி.பி. 1000 முதல் இராஜராஜன் மண்டபம் கட்டித் தந்தான்.
26. கி.பி. 1100-முதற் குலோத்துங்கன் - திருக்கோயில் முழுதும் திருப்பணி செய்து காட்டினார்.
27. கி.பி. 1300-இரண்டாம் குலோத்துங்கன் - வட்டப் பாறையம்மன் ஆலயம் மண்டபம், கோபுரம் அமைத்தார்.
28. மூன்றாம் குலோத்துங்கன் திருமதில் அமைத்தான்.

நாயன்மார்கள் - 6

29. கி.பி. 600-ஐயடிகள் காடவர்கோன் - க்ஷேத்திரவெண்பா (22) ஒன்றுபாடினார்.
30. கி.பி. 700- திருஞானசம்பந்தர், 1 பதிகம் (11 பாடல்கள்) பாடினார் (திருமுறை 3)
31. கி.பி. 700-திருநாவுக்கரசர்-5 பதிகங்கள் (திருமுறை 4,5,6) பாடினார்.

32. கி.பி. 800-சுந்தரர் - 2 பதிகங்கள் (திருமுறை 7) பாடினார்.
33. சங்கிலியார் - ஞாயிறில் பிறந்து, சுந்தரரை நிபந்தனையுடன் மணந்தார்.
34. கலிய நாயனார் - கோயிலில் குருதியால் விளக்கு ஏற்றினார்.

பாடிய புலவர்கள் - 23

35. கி.பி. 800 - ஆதிசங்கரர் நரபலியை நிறுத்தி கேரள நம்பூதிரிகளை பூஜைக்கு அமர்த்தினார்.
36. கி.பி. 900 - பட்டினத்தார் - பேய்க்கரும்பு இனித்ததால் இங்கு புதைந்து சிவலிங்கமானார்.
37. கி.பி. 1200 - கம்பர் - சதுரானன பண்டிதரிடம் வால்மீகியைக் கற்று தமிழில் பாடினார்.
38. கி.பி. 1400 - காளமேகம் - தியாகராசர் மேல் இரு பாடல்கள் பாடினார்.
39. கி.பி. 1500 - இரட்டையர்கள் - ஒற்றீசர்மேல் சில பாடல்கள் பாடினர்.
40. கி.பி. 1500 - அருணகிரிநாதர் - இவ்வூர் முருகன்மேல் இரண்டு திருப்புகழ் பாடினார்.
41. கி.பி. 1600 - ஒற்றிஞானப்பிரகாசர் - "திருவொற்றியூர்த் தலபுராணம்" பாடினார்.
42. கி.பி. 1800 - தியாகராஜ சுவாமிகள் - வடிவுடையாள் மீது பஞ்ச ரத்னக் கீர்த்தனைகள் பாடினார்.
43. கி.பி. 1800 - முத்துசாமி தீட்சதர் - "ஆதிபுரீஸ்வரம்" எனும் ஒரு கீர்த்தனை பாடினார்.
44. கி.பி. 1900 - இராமலிங்க அடிகளார் - கி.பி. 1835 முதல் 1858 வரை 23 ஆண்டுகள் வழிபட்டார்.
45. கி.பி. 1800 - வீணை குப்பையர் - தியாகராஜர்மேல் பல கீர்த்தனைகள் பாடினார்.
46. கி.பி. 1890 - 'கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்' சிவாலய மான்மியக்கோவை 256 பாடலில் போற்றினார்.

47. கி.பி. 1900 - பாம்பன் சுவாமிகள் - ஒற்றியூரைத் தரிசித்து பாடல்கள் பாடினார்.

48. கி.பி. 1891 - திருவொற்றியூர் கலம்பகம் 'பூவை அஷ்டாவதானம் கல்யாணசுந்தரர் 101 பாடல் பாடினார்.

49. கி.பி. 1898 - மறைமலை அடிகளார் - "திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை" பாடினார்.

50. ஸ்ரீசிதம்பரநாதமுனிவர் - க்ஷேத்திர கோவைப் பிள்ளைத் தமிழில் ஒற்றியூர் முருகனைப் போற்றினார்.

51. கி.பி. 1920 - ஸ்ரீபடம் பக்க நாதப் புலவர் - திருவொற்றியூர் செங்குந்த விநாயகர்மாலை (32 பாடல்) பாடினார்.

52. 'வடிவுடையம்மன் பிள்ளைத் தமிழ்' கனகசபைத் தம்பிரான் பாடினார்.

53. 'ஸ்ரீவடிவுடையம்மன் விருத்தம்' எனும் பழம் பாடல்கள் வழக்கில் உள்ளன.

54. வடிவுடையம்மை கலிவெண்பா 108 கண்ணிகள் ஒருவர் பாடியுள்ளார்.

55. கி.பி. 1950 திருவொற்றி வடிவுடை அம்மை அருள் வேட்டல் - பாரிப்பாக்கம் கண்ணப்பர் 101 பாடல்கள் பாடினார்.

56. கி.பி. 2000 - அருட்கவி சாதுராம் சுவாமிகள் - வடிவுடை நாயகி அம்மை விருத்தம் 15 பாடல்கள் பாடினார்.

57. வடிவுடை அம்மன் திருப்பள்ளியெழுச்சி - 30 பாடல் புலவர் என் நடராசன் பாடினார்.

அடியவர் - 3

58. கி.பி. 2000 - கபாலி சாஸ்திரிகள் - அன்னைமேல் "மகாமனுஸ்தவம்" 32 ஸ்லோகங்கள் பாடியுள்ளார். சமஸ்கிருதத்தில் விஜயா சங்கர நாராயணன் தமிழாக்கி உள்ளார்.

59. கி.பி. 1936 - திருவொற்றியூரான் அடிமை - ஒற்றீஸ்வரர் கோயிலைக் கட்டி 1936 இல் குடமுழுக்கு செய்தார்.

60. கி.பி. 1940 திரு.வி. கல்யாணசுந்தரம் போராடி வட்டப்பாறை அம்மனுக்கு பலி இடுவதை நிறுத்தினார்.

வாழிநின் சேவடி! போற்றிநின் பூம்பத வாரிசங்கள்!
வாழி நின் தாள்மலர்! போற்றி நின் தண்ணளி! வாழி நின்சீர்
வாழி என் உள்ளத்தில்! நீயும் நின்ஒற்றி மகிழ்நரும்! நீ
வாழி என் ஆருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே!

-இராமலிங்க அடிகளார் - வடிவுடை மாணிக்கமாலை

அருள்பொழியும் ஒற்றியூர் பாடல்கள்

(தினமும் பாராயணம் செய்ய ஏற்றது)

1. விதி, பாவத்தை விலக்குவார்!

விலகினார் வெய்ய பாவம், விதியால் அருள்செய்து நல்ல
பலகினார் மொந்தை, தாளம், தகுணிச்சம், பாணியாலே
அலகினால் வீசி நீர்கொண்டு அடிமேல் அலரிட்டு, முட்டாது
உலகினார் ஏத்த நின்றான் உறையும் இடம் ஒற்றியூரே!

-திருஞானசம்பந்தர் - 3ஆம் திருமுறை

2. ஊனத்தை ஒழிப்பார்!

தானத்தைச் செய்து வாழ்வேன் சலத்துளே அழுந்துகின்றீர்
வானத்தை வணங்க வேண்டில் வம்மின்கள்! வல்லீராகிஇவ்
ஞானத்தை விளக்கை ஏற்றி நாடிஉள் விரவவல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும் ஒற்றியூர் உடைய கோவே!

- திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை

3. நோய்கள் தீர்ப்பார்!

மற்றுத் தேவரை நினைந்து உனை மறவேன், நெஞ்சினா
றொடுவாழவும் மாட்டேன்
பெற்றிருந்து பெறாது ஒழிகின்ற பேதையேன்
பிழைத்திட்டதை அறியேன்
முற்றுநீ எனை முனிந்திட, அடியேன் கடவதுஎன்?
உனைநான் மறவேனேல்
உற்ற நோய், உறுபிணி தவிர்த்து அருளாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே

-சுந்தரர் - 7ஆம் திருமுறை

4. தேர் உலவும் ஒற்றியூர்

பேருலகில் ஓங்கு புகழ்ப் பெரும்தொண்டை நன்னாட்டு
நீருலவும் சடைக்கற்றை நீருத்தர் திருப்பதியாம்
காருலவு மலர்ச்சோலைக் கன்னிமதில் புடைசூழ்ந்து
தேருலவு நெடுவீதி சிறந்த திருவொற்றியூர்!

-சேக்கிழார் - பெரியபுராணம் 12ம் திருமுறை

5. சிவாலய மான்மியக் கோவை

கறுத்திடும் களத்தாய் சுந்தரர்க்கு உவந்து
கவின்அமர் சங்கிலி யாரைப்
புறத்தினின் அமைத்து மணம்முடித்தவனே
புனிதனே ஒற்றியூர் அரசே!
நிறத்தினால் பசிய வடிவுடை அம்மை
நேயனே! மாணிக்கத் தியாகா!
திறத்து அடைந்திடவே அடியேனுக்கு அருள்வாய்!
செல்வமே! கருணை வாரிதியே!

-மகாவித்வான் சிவக்கொழுந்து தேசிகர் பாடல் 256

6. மனநோய் தீர்ப்பாய்

நில்லா உடம்பை நிலை என்றே நேசிக்கும்
பொல்லாத நெஞ்சப் புலையனேன் இவ்வுலகில்
சொல்லா மனநோயால் சோர்வுற்று அலையும் அல்லல்
எல்லாம் அறிவாய் எழுத்தறியும் பெருமானே!

-இராமலிங்க அடிகளார், எழுத்தறியும் பெருமான் மாலை 5

7. தியாகர் பவனி ஓட்டம்!

தக்கவளம் சேர் ஒற்றியில்வாழ் தம்பிரானார் பவனிதனைத்
துக்கம்அகன்று காணவந்தால், துகிலைக்கவர்ந்து
துணிவுகொண்டே
பக்கமருவும் நமைத்திரும்பிப் பாராது ஓடுகின்றார்நாம்
ஒக்க ஓடினாலும் அவர்ஓட்டம் பிடிக்க ஒண்ணாதே!

-இராமலிங்க அடிகளார்,
தியாகர் பவனி ஓட்டம் திருவருட்பா 3ஆம் திருமுறை

8. நவநிதியம் அருள்வாய்!

நன்றுஅனைத்தும் செய்வார்க்கு நவநிதியம் ஈந்திடுவாய்
கொன்றுஅருந்தும் பாவிகட்கு குலநமனாய் நின்றிடுவாய்!
குன்றனைய கோபுரங்கள் குலவு திருவொற்றியினில்
ஒன்றிஉறை தியாகேச உயர்தெய்வ மாமணியே!

-அஷ்டாவதானம் கல்யாணசுந்தரர் - திருவொற்றியூர் கலம்பகம் 60

9. புது வாழ்வு அளிப்பாய்!

சித்தர் போற்றும் தேவாதி
தேவன் வாழும் திருவொற்றி
அத்தர் உள்ளத்து உள்ஒளியே!

அகிலம் புரக்கும் அற்புதமே!
சித்தம் தெளிவித்து எனைஆண்டு
செய் தீவினைகள் எல்லாம் அகற்றிப்
புத்தம் புதிய வாழ்வுஅளிக்கும்
புனித வடிவப் பூங்கொடியே!

-பாரிப்பாக்கம் கண்ணப்பர் வடிவுடைஅம்மை அருள்வேட்டல் 32

10. வாழ்வு செழிக்க அருளுவாய்!

சந்தனம் ஈதுஎன மணமுடை மேனி
கதிர்மதி எனஒளிர் கவினுடை மாதர்
செந்திரு சங்கிலி பரவையின் மீது
சிறப்புடன் அவன்மனம் பொருந்தியபோது
சுந்தர மூர்த்தியின் சுகிர்தநல் வாழ்வே
செழித்திட அருள்புரி செழுமலர்க் கண்ணாய்
வந்தனை செய்தனம் வடிவுடை அம்மா!
வான்மதியே பள்ளி எழுந்தருள் வாயே!

-புலவர் நடராஜன் - வடிவுடையம்மன் திருப்பள்ளி எழுச்சி 7

11. மூன்று சக்தி வழிபாடு

மூன்றுசக்தி அருளே! மெய்ஞ்ஞான சக்திநீ,
முழுமதி நிலா நாளும் மேல்
மொய்சுக்ர வாரமதும் முற்றும் மொழிநடுப்
பகல் வேளையில் பொருந்துதினம்
தோன்று மேலூர்த் திருவுடைத்தாய் உனைக்காலை
தொழுத அடியார் கூட்டமே
தொடர்ந்து வந்து இவண் வழிபடும் பிறகு
மாலையில் சூழ்ந்து வடமுல்லைவனம்அஞ்
ஞான்று உன்னையே தரிசனம்செயும் கொடி
இடைய நாயகியின் வடிவத்திலே
நந்திபகவான் மாடவீதி உத்திரம் உளதில்
நனிதனிக் கோயில் கொளும் ஊர்
ஊன்றுகோலாய் எனக்கு உற்றெனது அருட்புகழ்முன்
ஒற்றீசன் ஏற்ற திருவூர்
ஒற்றியூர் ஆதிபுரி வெற்றிசேர் கொற்றி! வடிவுடை
நாயகிப்பெண் உமையே!

-ஸ்ரீசாதுராம் சுவாமிகள், வடிவுடை நாயகி விருத்தம் 12

12. பட்டினத்தாரின் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது (தமிழ் அருச்சனைக்கு ஏற்றது)

காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்று மாகிய முதல்வ போற்றி
அணைதொறுஞ் சிறக்கும் அமிர்தே போற்றி

இணைபிறி தில்லா ஈச போற்றி
ஆர்வஞ் செய்பவர்க் கணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை மிர்தா நயந்தோய் போற்றி

விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துறை செம்மைக்
காணி யாகிய அரனே போற்றி
வெம்மை தண்மையென் றிவைகுணம் உடைமையிற்

பெண்ணொ டுஆண்எனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினிற் படுக்கும்
தீப மாகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் பொற்றி வேதிய போற்றி

சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி போற்றி என்றுனை

நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற் குரியோர் யார்இரு நிலத்தே!

-பதினோராம் திருமுறை

திருவொற்றியூர்ப் பூசை

(வேல்வழிபாடும் மகேசுவர பூசையும்)

முனைவர் சபா.அருணாசலம், முனைவர் கரு.முத்தய்யா அவர்களால் தொகுக்கப்பட்டு மணிவாசகர் பதிப்பகம் முனைவர் ச.மெய்யப்பன் அவர்களால் 1998இல் வெளியிடப்பெற்ற நகரத்தார் கலைக் களஞ்சியம் நூலிலிருந்து இப்பகுதி வெளியிடப்பெறுகிறது.

நகரத்தார் வழிபடும் தலங்களில் திருவொற்றியூர் சிறப்பிடம் பெறுகின்றது. சென்னையில் தொழில்செய்து வந்த நகரத்தார் திருவொற்றியூர் வடிவுடையம்மன் உடனாய தியாகராசர் கோவில் மாசி மாத அறுபத்துமூவர் திருவிழாவிற்குச் சென்று வழிபட்டு வந்தனர். அவர்கட்காக ஏறத்தாழ 200 ஆண்டுகட்கு முன் திருவொற்றியூரில் நகரவிடுதி அமைக்கப்பெற்றது. சென்னை பவளக்காரத் தெருவில் பழைய தெண்டாயுதபாணி கோவில் வீட்டில் தேவகோட்டையாரின் 16 கடைகள் இருந்தன. பின்னர்த் தோன்றிய புதுத் தெண்டாயுதபாணி கோவில் வீட்டில் காரைக்குடி அதைச் சூழ்ந்த ஊராரின் 15 கடைகள் இருந்தன. தேவகோட்டையார் கடையைச் சேர்ந்தவர்கள் திருவொற்றியூர் நகரவிடுதியை உருவாக்கி அங்கு திருவிழாக் காணவரும் நகரத்தாருக்குச் சோறு வடித்துப் போடத் தொடங்கினர். பின்பு பழைய தெண்டாயுதபாணி கோவில் வேலையும் இடும்பனையும் திருவொற்றியூர் நகரவிடுதிக்குக் கொண்டு சென்று மகேசுவர பூசை செய்து அன்னதானம் செய்யலாயினர்.

ஏறத்தாழ 165 ஆண்டுகட்கு முன் இப்பூசை தொடங்கியது. அதன்பிறகு சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்துக் காரைக்குடியார் கடையிலிருந்த புதுத்தெண்டாயுதபாணி கோவில் வேலையும் திருவொற்றியூர் கொண்டு சென்று

இரு வேலுக்கும் பூசையிட்டு இரு இடும்பனுக்கும் பள்ளயம் போட்டுப் படைத்து மகேசுவர பூசை செய்து அன்னதானம் செய்வது தொடர்ந்தது. தொடக்கக் காலத்தில் மாட்டு வண்டியில்தான் வேலைக் கொண்டு போய்ப் பூசையிட்டனர். இப்பொழுது பிள்ளையார் சிறிய தேரிலும் தண்டாயுதபாணியும் இடும்பனும் பெரிய தேரிலும் எழுந்தருளித் திருவொற்றியூர் செல்கின்றனர். காரைக்குடியார் விடுதியிலும் இதுபோல இருதேர்கள் உள்ளன. தேவகோட்டையார் விடுதித்தேர் மரத்தேர். காரைக்குடியார் விடுதித்தேர் வெள்ளித்தேர் ஆகும்.

திருவொற்றியூர்க் கோவிலில் மகத்துக்கு முதல்நாள் ஆயில்யம் நாள் அன்று மகிழடி சேவை நடைபெறும். அதற்கு மூன்று நாள் முன்பாக இரு விடுதிகளிலிருந்தும் இரண்டிரண்டு தேர்கள் புறப்பட்டுச் செல்லும். ரெங்கோன் நகர விடுதியிலிருந்து சென்னைவாழ் நகரத்தார் குழுவினர் பலர் இரு தண்டாயுதபாணிக்கும் பட்டுக் கொண்டுவந்து சாத்துவர்.

முதல் நாள்	-	மயில்வாகனத்தில் சுவாமி புறப்பாடு
இரண்டாவது நாள்	-	ராஜ அலங்காரம்
மூன்றாவது நாள்	-	மார்க்கண்டேய அலங்காரம்
நான்காம் நாள்	-	ராஜ அலங்காரம்
ஐந்தாம் நாள்	-	குதிரை வாகனத்தில் சுவாமி சென்னை புறப்படுதல்.

இரு தெண்டாயுதபாணிக்கும் ஒரே மாதிரி அலங்காரம் செய்து பக்கத்தில் பக்கத்தில் காட்சிதரச் செய்வர். முதல்நாள் காலை 9 மணிக்குச் சுவாமி சென்னையிலிருந்து புறப்படுவார். அட்டாங்க செட் எனப்படும் 3 பதக்கம், 4 பாசிமாலைகள், 1 காசுமாலை வைரத்தோடு மார்பின் இருபுறமும் வைரக் குமிழ் ஆகியவை அணிந்து சுவாமி புறப்படும் காட்சியும் மகத்தன்று இரவு நிலவொளியில் சென்னை திரும்பிவரும் காட்சியும் கண்கொள்ளா அழகுக்காட்சியாகும். ஏறத்தாழ 4000 பேர் சுவாமி போகும் போதும் வரும்போதும் பின்னால் நடந்து செல்வர். வழியெங்கும் லட்டு, மிட்டாய், பழச்சாறு, தண்ணீர் முதலியவற்றை நூற்றக்கணக்கானோர் வழங்குவார்கள்.

முதல் நாள்	-	பானகபூசை - இரவு சாப்பாடு
2 ஆம் நாள்	-	காலை 4 மணி விநாயகப் பானை வைத்தல்; 11 மணிக்குக் கட்டியம் கூறிப் பூசையிட்டுச் சாப்பாடு; இரவுச் சாப்பாடு.
3 ஆம் நாள்	-	மதியம் 11 மணி - சாப்பாடு - இரவுச்சாப்பாடு, தீபாராதனை.
4 ஆம் நாள்	-	காலை 4 மணி - விநாயகப் பானை வைத்தல் - 11 மணி - பூசை - கட்டியம் கூறிச் சாப்பாடு - 2 மணி ஏலம் - இரவு - சாப்பாடு
5 ஆம் நாள்	-	காலை 11 மணி - சாப்பாடு - மதியம் 2 மணிக்குச் சுவாமி புறப்பட்டு இரவு நிலவொளியில் பவனிவந்து காலை 5 மணியளவில் சென்னை பவளக்காரத் தெரு சேரும்.

மகிழடி சேவையன்று திருவிழாவில் திருவொற்றியூர்ச் சுவாமியும் அம்பாளும் அறுபத்து மூவரும் புறப்பட்டு விடுதி முன் வந்து நிற்கும்போது பட்டுச் சாத்துவர்.

குழந்தை பிறக்க வேண்டிக்கொண்டவர்கள் கரும்புத் தொட்டில் கட்டுவார்கள். மாவிளக்கு வைப்பார்கள். சோற்றுக் காணிக்கை பணம் எழுதுவார்கள். இரு தெண்டாயுதபாணிக்கும் ஒரே மாதிரி இரு உண்டியலிலும் காணிக்கை செலுத்துவார்கள்.

நகரத்தார்களுக்கும் அப்பகுதி ஏழை மக்கட்கும் செய்யப்படும் அன்னதானத்தில் ஏறத்தாழ லட்சம் பேர் கலந்து கொள்வர். 85 மூட்டை அரிசி வடிக்கப்படுகின்றது. பணி செய்யும் ஏவலர்க்குக் கடைசி நாள் அரிசி அளந்து போடுவர். சென்னையில் கடை வைத்திருக்கும் நகரத்தார் தரும் மகமையாலும் நகரத்தார் ஏலம் எடுப்பதில் வரும் தொகையாலும் உண்டியல் வரவாலும் அரிசி மூட்டை போன்றவை தரும் உபயத்தாலும் இவ்விழா தொடர்ந்து சிறப்புற நடைபெறுகிறது. ஏறத்தாழ இவ்விழாவிற்கு ஆண்டுதோறும் 2 1/2 இலட்சம் ரூபாய் செலவாகிறது. இதில் பாதித்தொகை ஏலத்தில் கிடைக்கிறது.

அழைக்கப்படும் மண்ணடி முத்தியாலுப்பேட்டையில் சென்னியப்ப நாயக்கர் சிற்றூரை ஜார்ஜ் டவுன் என்று கோட்டை கட்டி வெள்ளையர்கள் ஆட்சி செய்த காலத்தில் வியாபார சம்பந்தமாகவும் கப்பல் போக்குவரத்தை உத்தேசித்தும் நகரத்தாரும் சென்னை வந்து தொழில் செய்ய ஆரம்பித்தனர். அப்போது அவர்கள் செய்த தொழிலில் பழநி தெண்டாயுதபாணியை நினைத்து அவர் பெயருக்கு வைத்த பணத்தில் வந்த லாபத்தில் இடங்கள் வாங்கி மண்ணடியில் கட்டிய விடுதிகளே தேவகோட்டையார் விடுதி என்ற பவளக்காரத் தெருவில் உள்ள பழைய தெண்டாயுதபாணி விடுதியும், 27, பவளக்காரத் தெருவில் உள்ள காரைக்குடியார் விடுதி என்ற புதுத் தெண்டாயுதபாணி விடுதியும், அதை சுவாமி வீடாக வழிபட்டு வந்தனர். வேலுக்கும் நித்திய பூஜை செய்தனர்.

ஏழை எளியோருக்கு அன்னதானம் செய்ய வேண்டுமென விரும்பி வேல் எடுத்து பட்டினத்தார் முக்தி பெற்ற திருவொற்றியூரிலே சுந்தரமூர்த்தி நாயனாருக்கு கல்யாணம் நடத்த மாசி மாதம் திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவிலில் மகிழடி சேவையன்று நம் திருவெற்றியூர் சத்திரத்தில் நகரத்தார்களால் பெரிய பூஜை நடத்தி அதற்கு முன்பு 3 நாட்கள் மேலும் மறுநாளுடன் சேர்ந்து 5 நாட்கள் பூஜை நடத்தி 5 நாட்களும் அன்னதானம் செய்தனர். இந்த அன்னதானம் செய்த இடம் முன்பு பனைமரத்துக் காடாக இருந்தது. பின்பு நம்மவர்களால் திருவொற்றியூர் நகர விடுதியாக கட்டப்பட்டது.

இப்படி மண்ணடியில் இருக்கும் பழைய தண்டாயுதபாணியும், புதுத் தண்டாயுதபாணிபாணியும் தனித்தனி ரதங்களில் ஒன்றன்பின் ஒன்றாக திருவொற்றியூரில் நடக்கும் மாசி மாதம் மகிழடி சேவைக்கு சென்னை பவழக்காரத் தெருவில் உள்ள பழைய மற்றும் புதிய தண்டாயுதபாணி விடுதிகளில் இருந்து புறப்பட்டு திருவொற்றியூருக்கு வந்து திருவொற்றியூர் விடுதியில் 5 நாட்கள், பூஜை அன்னதானம் முடித்து, பின்பு திரும்ப சென்னைக்கு அதனதன் விடுதிகளுக்குச் செல்லும்.

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ராபர்ட் கிளைவ் காலத்தில் திருவொற்றியூரில் அன்னதானத்திற்காக பனந்தோப்பாக இருந்த இடம் கொடுக்கப்பட்டது. அந்த இடத்தில் சத்திரம் கட்டி சென்னையில் உள்ள மேற்சொன்ன இரு வீட்டாரும் சேர்ந்து தீப அலங்காரத்துக்கு தண்டாயுதபாணிக்கு 120 வருடங்களுக்கு முன்பாக திருவொற்றியூரில் சத்திரமும் மண்டபமும் அமைத்தனர்.

மேற்சொன்ன இரண்டு தண்டாயுதபாணியும் மாசிமகம், மகிழடி சேவைக்கு மூன்று நாட்கள் முன்பு அதாவது மாசிமகம் 4ம் தேதி என்றால் முதல் தேதி சுவாமிகள் சென்னையிலிருந்து தனித்தனி ரதங்களில் பிள்ளையார் ரதம் முன் செல்ல புறப்பட்டு திருவொற்றியூர் வந்து இவ்விடம் 5 நாட்கள் பூஜை மற்றும் அன்னதானம் முடித்து திரும்ப மாசி மகத்திற்கு மறுநாள் அதாவது 5-ஆம் தேதி திரும்ப சென்று அதனதன் விடுதிகளில் சேரும். சுவாமி ரதங்களில் வரும்போது மேளவாத்தியங்கள் முழங்க அலங்கார கொடிகளுடன் பாண்டு வாத்தியங்கள் இசைக்க, தீவட்டிகள் முன்செல்ல மெய்யன்பர்களின், மெல்லிசைப் பக்திப் பாடல்கள் ஓங்காரத்துடன் ஒலிக்க மண்ணடியிலிருந்து புறப்பட்டு வரும் காட்சியும் எல்லா ஊர்களிலிருந்து நகரத்தார்களும், ஆச்சிமார்களும், குழந்தைகளும் கூட நடந்து வருவது பார்ப்பவர் கண்ணுக்கு பேரானந்தம் தரும் கண் கொள்ளாக்காட்சி.

சுவாமி வரும்போதும் திரும்ப போகும்போதும் மக்கள் அலைகடலென ரதத்துடன் நடந்து செல்வர். தேரில் பவனி வரும் பழைய மற்றும் புதிய தெண்டாயுதபாணியின் அழகை காண கண் கோடி வேண்டும். வழியெங்கும் தோரணங்கள், பட்டுச் சாத்துவோர், பூமாலை அணிவிப்போர், அர்ச்சனை செய்வோர் ஏராளம். சென்னை நகரவாசிகள் அனைவரும் நம் தெண்டாயுதபாணியை நாட்டுக்கோட்டைச் சாமி என்று மிகவும் சிறப்பாக பயபக்தியுடன் வரவேற்பார்கள். வணங்கி மகிழ்வார்கள். சிதர் தேங்காய் உடைத்து வழி எங்கும் குவியல்களாய் வரவேற்பார்கள். நடந்து வரும் பக்தர்களுக்கு எல்லாம் நம் நகரத்தார்கள் அன்னதானம், ரொட்டி மிட்டாய், சர்பத், டீ, காபி போன்றவைகள் வழங்கி தெண்டாயுதபாணியின் அருளை வேண்டி வழிபடுகின்றனர்.

திருவொற்றியூரில் சுவாமி வந்து சேர்ந்ததும் இரண்டு தெண்டாயுதபாணிக்கும் ஒரேநேரத்தில் அலங்கார தீபங்கள் காட்டி பக்தர்கள் பாவிசைக்க மேளதாள வாத்தியங்களுடன் அலங்கார தீபங்கள் காட்டி அன்னதானமும் செய்து வருகிறார்கள். மகப்பேறு வேண்டி பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் மகப்பேறு கிட்டியதும் கரும்புத் தொட்டில் கட்டி மகிழ்பவர்கள் ஏராளம். பழைய தெண்டாயுதபாணி சுவாமியும், புதுத் தெண்டாயுதபாணி சுவாமியும் திருவொற்றியூரில் 5 நாட்கள் தங்கி அன்பர்களுக்கு அருளுவது பெருந்திருவிழாவாக நடந்து வருகிறது. இந்த 5 நாட்களும் வேலுக்கு பூஜை செய்து அன்னதானம் நடைபெறும். மேற்கண்ட இரண்டு வீட்டாரும் சேர்ந்து இவைகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். இந்த விழாவில் அனைத்து ஊர் நகரத்தார்களும் வந்து சிறப்பாக கலந்து கொண்டு இறைவனை வழிபட்டு பேரானந்தம் அடைகின்றனர்.

நன்றி: **திருவொற்றியூர் நகரத்தார் சங்க**
வெள்ளி விழா மலர்.

ஸ்ரீபட்டினத்தார் திருவிழா

ஸ்ரீ பட்டினத்தார் கோவில், திருவொற்றியூர்,
சென்னை - 600 019.

பட்டினத்தாரின் சமாதித் திருக்கோவில் அமைந்துள்ள திருவொற்றியூரிலும் விழா நடத்த வேண்டும் என விரும்பிய நகரத்தார்கள் 'காவிரிப்பூம்பட்டினம் நகரத்தார் டிரஸ்ட்' என்ற அமைப்பின் வாயிலாக 1997 முதல் ஆவணி மாதம் மூன்று நாள் விழாவாக நடத்தி வருகின்றனர்.

வீடு நமக்குத் திருவாலங்காடு விமலர் தந்த
ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திரம் ஓங்கு செல்வ
நாடு நமக்குண்டு கேட்டவெல்லாம் தர; நன்நெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ ஒருவரும் இங்கில்லையே

பேரன்புடையீர், வணக்கம்.

திருவொற்றியூரில் உள்ள ஸ்ரீபட்டினத்தார் கோவிலில் விளம்பி வருடம் ஆவணி மாதம் உத்திராடத்தை முன்னிட்டு ஸ்ரீபட்டினத்தார் விழா நம் அறநிலை சார்பாக 22 ஆண்டுகளாக அபிஷேக ஆராதனை, சொற்பொழிவாக நடைபெறுகிறது. அதற்குத் தாங்கள் வருகைதந்து ஸ்ரீபட்டினத்தார் திருவருளுக்குப் பாத்திரமாக அன்புடன் வேண்டுகிறோம். காலை 9.00 மணிக்கு ஆவணி உத்திராடத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.

அன்புடன்

காவிரிப்பூம்பட்டினம் நகரத்தார் டிரஸ்ட்


அழ.அரு.சோம. நாராயணன் செட்டியார்,
தலைவர், Ph: 04561-273073

கயிலைமணி பொற்கிழிக்கவிஞர் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன்,
செயலர், Ph: 04565-238196, Cell:94431 38196, www.aruso.in


குறிப்பு: வெளியூரில் இருந்து வருபவர்களுக்குச் சென்னை திருவொற்றியூர் நகர விடுதியில் தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. வேண்டுகோள்: ரூ.1000/-க்கு மேல் நிரந்தர நிதிபெற்று வங்கியில் வைப்புத் தொகையாக வைத்து அதன் வருவாயில் இருந்து இவ்விழா நடத்தப்படுகிறது. ஆகவே ரூபாய் ஆயிரமும் அதன் மடங்குமாக இயன்ற அளவு காவிரிப்பூம்பட்டினம் நகரத்தார் டிரஸ்ட் என்ற பெயரில் AL.AR.SM. நாராயணன் செட்டியார் Palace, தேவகோட்டை-630 302 என்ற முவரிக்கு டிராப்டு அனுப்பி டிரஸ்டில் உறுப்பினராகிப் பட்டினத்தார் திருப்பணியில் பங்கு பெற வேணடுகிறோம்.



தேரில் பவனி வரும் புதுத் தெண்டாயுதபாணி சுவாமி
(காரைக்குடியார் விடுதி)



தேர்களுக்கு முன்னால் செல்லும் பிள்ளையார் ரதங்கள்



திருவொற்றியூர் நகர விடுதியில் மாசிமக திருவிழாவை முன்னிட்டு
அருள் பாலிக்கும் திருத்தெண்டாயுதபாணி சுவாமிகள்

புகைப்படங்கள் : தேனா. போட்டோஸ் - பழனியப்பன்
செல் : 9444995514